**2020 නොවැම්බර් 24**
2020 நவெம்பர் 24
**24 November 2020**

# NAOSL

වාර්තාවේ අංකය : එස්පීආර්/2020/18
அறிக்கை இல. : எஸ்பீஆர்/2020/18
Report No : SPR/2020/18

# මඩකලපු පෞද්ගලික විශ්වවිද්‍යාල විද්‍යායතනය ස්ථාපිත කිරීමේ හා පවත්වාගෙන යාමේ ක්‍රියාවලිය පිළිබඳ විශේෂ විගණන වාර්තාව

# மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் நடைமுறை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

# Special Audit Report on the Process of Establishment and Maintenance of Private University College of Batticaloa

**ජාතික විගණන කාර්යාලය**
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



SPR/2020/18
මඩකලපු පෞද්ගලික විශ්වවිද්‍යාල විද්‍යායතනය ස්ථාපිත කිරීමේ හා පවත්වාගෙන යාමේ ක්‍රියාවලිය පිළිබඳ විශේෂ විගණන වාර්තාව
மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் நடைமுறை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை
Special Audit Report on the Process of Establishment and Maintenance of Private University College of Batticaloa

Printed by Digital PRESS - NAOSL

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

**මඩකලපු පෞද්ගලික විශ්වවිද්‍යාල විද්‍යායතනය ස්ථාපිත කිරීමේ හා පවත්වාගෙන යාමේ ක්‍රියාවලිය පිළිබඳ විශේෂ විගණන වාර්තාව**

# Special Audit Report on the Process of Establishment and Maintenance of Private University College of Batticaloa

**மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் நடைமுறை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை**

# පටුන


| අනු අංකය | විස්තරය | පිටු අංකය |
|---|---|---|
| 01 | විධායක සාරාංශය------------------------------------------------------------------------ | 1-2 |
| 02 | වාර්තාවේ පසුබිම හා ස්වභාවය -------------------------------------------------------- | 2-3 |
| 03 | වාර්තාව පිළියෙල කිරීම සඳහා අනුගමනය කරන ලද ක්‍රමවේදයන් --------------- | 3 |
| 04 | විගණන විෂය පථය ------------------------------------------------------------------ | 3 |
| 05 | විෂය පථයේ සීමාවන් ------------------------------------------------------------ | 4 |
| 06 | ආයතන අනන්‍යතාවය හඳුනාගැනීම ------------------------------------------------ | 4 |
| 07 | ක්‍රියාවලිය ------------------------------------------------------------------------ | 4 - 19 |
| 08 | විගණන නිරීක්ෂණ ---------------------------------------------------------------- | 20 - 40 |
| 09 | නිර්දේශ --------------------------------------------------------------------------- | 40 - 43 |
| 10 | දෙමළ පරිවර්ථනය ---------------------------------------------------------------- | 45-94 |
| 11 | ඉංග්‍රීසි පරිවර්ථනය ------------------------------------------------------------ | 95-139 |
| 13 | ඇමුණුම් ---------------------------------------------------------------------------- | 141-544 |
| 14 | උපලේඛණ --------------------------------------------------------------------------- | 545-559 |

**மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் நடைமுறை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை**

---

## 1. நிறைவேற்றும் பொழிப்பு

இலங்கையில் தேசிய மட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்பட்டுள்ள மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை (பெடிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி) ஸ்தாபித்தல் தொடர்பாக அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகளுக்காக உதவியளிக்கும் வகையில் விசேட புலனாய்வினை மேற்கொள்ளுமாறு வேண்டுதல் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்காய்வு புலனாய்வு நடவடிக்கையானது நிறுவக தோற்றங்கள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்டது. சட்டரீதியான கட்டமைப்புக்குள் ஒரு உயர் கல்வி நிறுவனத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை என தொழிற் பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் இனங்காணப்பட்டிருந்தும் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரிக்கு சட்டரீதியான தன்மையை ஏற்படுவதபனை உணர்த்தும் வகையில் இளைஞர் விவகார அமைச்சிற்கும் தனியார் பல்கலைக்கழக கல்லூரிக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மஹவெலி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் இக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு காணியை தனிப்பட்ட ஒரு பயன்பாட்டிற்கு வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் முறையான ஒழுங்குபடுத்துதல்கள் இல்லாததன் காரணமாக சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சட்டரீதியாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணியின் அளவு 35 ஏக்கர்களாக இருந்த போதிலும் சட்டரீதியற்ற வகையில் 55 ஏக்கர்கள் காணி வரை பல்கலைக்கழக கல்லூரியின் மூலம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் புதிய ஒரு செயற்திட்டமன்றி காணப்படுகின்ற ஒரு செயற்திட்டத்தின் விஸ்தரிப்பாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக வசதிகள் வழங்கப்படுவதில்லை என்ற நிபந்தனைக்கு இணக்கமற்ற வகையில் மேற்கூறிய தனியார் கல்லூரியானது முதலீட்டுச் சபை செயற்திட்டமாகப் பதிவு செய்யப்பட்டு ரூபா 71 மில்லியன் இறக்குமதி தீர்வை நிவாரணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மத்திய வங்கி வழிகாட்டிகள் மற்றும் சட்ட விதிகளுக்கு இணங்கும் வகையில் முறையாக கவனம் செலுத்தப்படாது இலங்கை வங்கியினால் கல்லூரிக்கு கிடைத்திருந்த ரூபா 3,671 மில்லியன் அளவான வெளிநட்டுப் பணம் அனுப்புதல்களின் பெறுவனவுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இச் செயற்திட்டத்திற்காக அரசாங்க காணியை வழங்கும் நடைமுறையும் சட்டரீதியான தன்மையும், நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடர்புபட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த முறைமை, உரிய சுற்றாடல் அங்கீகாரங்கள் உயர் கல்வி நிறுவனமாக இலங்கையில் தொழில் முயற்சியினை மேற்கொள்வதற்காக அங்கீகாரத்தினை வழங்கும் நடைமுறையும் சட்டரீதியான தன்மையும், வரி நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்தில் முதலீட்டுச் சபையின் அங்கீகரித்த செயற்திட்டமாக பதிவு செய்யும் நடைமுறையும் சட்டரீதியான தன்மையும், அவ்வாறே உள்வருகின்ற வெளிநாட்டு நாணயம் தொடர்பான போதியளவான கண்காணிப்புக்கள் உரிய அதிகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம் இடம் பெற்றுள்ளனவா என்பது இத்தனியார் நிறுவனத்தின் மூலம் சமூக எதிர் விளைவுகள் இடம் பெற்றுள்ளதா என்பது மற்றும் இவற்றுக்குச் சமமான ஏனைய விடயங்களும் பரீசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் காணிகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் இச் செயற்திட்டத்திற்கு இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை வங்கி இப்பாரிய அளவிலான உள்வருகின்ற வெளிநாட்டு நாணயம் சம்பந்தமாக முறையான கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும், இத் தனியார் பல்கலைக்கழக நிறுவனத்தை ஸ்தாபிக்கும் போது அங்கீகாரத்தினை வழங்கிய மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்ட அரசாங்க நிறுவனம் ஏனைய சமமான நிறுவனத்துக்கு வழங்கியிருக்காத விசேட கருணையுடன் செயற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிறுவனரீதியான கட்டமைப்பானது மேற்கூறிய விடயம் சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடும் போது சட்டரீதியான தன்மையினை மீறுதல், வெளிப்படைத்தன்மையின்றி செயற்படல், பொறுப்புக்களுக்கு எதிராக செயற்படல் என்பன தொடர்பாக ஒழுக்காற்று சட்டவிதிகள் மற்றும் சாதாரண சட்ட விதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நிறுவனரீதியான கடமைகள் சம்பந்தமாக சிபார்சுகளைச் சமர்ப்பித்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. அறிக்கையின் பின்னணியும் தன்மையும்

---

இலங்கையில் தேசிய மட்டத்தில் கலந்துரையாடலுக்கு உள்ளாகியிருந்த மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியை ஸ்தாபிப்பது தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வு நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்கான விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு எனக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்க மேற்கொண்ட பரிசோதனையின் பிரகாரம் ஹிரா மன்றம் என்ற பெயரிலான நிறுவனத்தினால் உயர்கல்வி நிறுவனத்தை தோற்றுவிக்கும் குறிக்கோளில் தொழில்சார் பயிற்சி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை சம்பந்தமான சிக்கல் நிலைமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2015 ஆம் ஆண்டின் போது புரிந்துணர்வு உடன்படிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினால் ஒரு உயர் கல்வி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அடிப்படை முறைமைகளைத் தயாரிக்காது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்தலினைப் பெற்று NVQ சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் மஹவெலி அதிகாரசபையிடமிருந்து நீண்டகால குத்தகைக்கு ஒரு காணி பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் இலங்கை முதலீட்டுச் சபை வசதிகள் வழங்கப்படுகின்ற செயற்திட்டமாக இலங்கை வங்கியில் மட்டக்களப்பு கெம்பஸ் லிமிட்டட் என்ற பெயரில் திறக்கப்பட்ட வங்கி கணக்கினூடாக உயர்ந்த பெறுமதியைக் கொண்ட வெளிநாட்டு உள்ளக பணம் அனுப்புதல்களைப் (Forign Inward Remittance) பெற்றுக்கொண்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மஹவெலி அதிகாரசபை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை மேற்கூறிய செயற்திட்டத்திற்கான வசதிகளை வழங்கும் போது முறையான நடைமுறை பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது மற்றும் உள்ளக பணம் அனுப்புதல்கள் சம்பந்தமான நாணயமாற்று சட்டவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை வங்கி (உரிய வங்கியாளர்) செயற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது பங்களிப்பு மற்றும் சிபார்சுகளை வழங்கிய மேற்கூறிய நிறுவனத்தின் செயற்பாடுகளின் பரிசோதனையின் மூலம் இனங்காணப்பட்ட தகவல்களை உள்ளடக்கி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## 3. அறிக்கையினைத் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறைகள்

---

3.1 ஆவணங்களைப் பரீட்சித்தல்.

3.1.1 உரிய அதிகாரச்சட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் வர்த்தமானி வெளியீடுகளைப் பரீட்சித்தல்

3.1.2 நிறுவன ரீதியான சட்டங்கள் மற்றும் நடைமுறைகளைப் பரீட்சித்தல்.

3.1.3 செயற்திட்ட கம்பனிக்கும் அரசாங்க நிறுவனங்களுக்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை பரீட்சித்தல்

3.1.4 மேற்கூறிய விடயத்திற்குரிய தொடர்பினைக் கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் பேணி வந்துள்ள கோவைகளைப் பரீட்சித்தல்.

3.1.5 செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காணி மற்றும் செயற்திட்டத்திற்கு உள்ளேயுள்ள நிர்மாணங்களுக்காக உரிய நிறுவனங்களால் வழங்கப்பட்ட அங்கீகாரங்களைப் பரீட்சித்தல்.

3.2 ஏனைய நடைமுறைகள்

3.2.1 மட்டக்களப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள உரிய செயற்திட்ட கம்பனியின் பௌதீகப் பரிசோதனை

3.2.2 செயற்திட்ட கம்பனி மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் மற்றும் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளல்.

## 4. கணக்காய்வின் நோக்கெல்லை (Audit Scope)

---

மஹவெலி காணியை நீண்டகால குத்தகைக்கு வழங்கும் நடைமுறை, முதலீட்டுச் சபையினால் செயற்திட்டத்திற்காக அங்கீகாரத்தினை வழங்கும் நடைமுறை, ஒரு தனியார் கம்பனிக்கு பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியினை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்பட்ட மதிப்பீட்டு வரையறைகள், தொழில்சார் பயிற்சி அமைச்சு மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழு NVQ கற்கை நெறிக்காக நிறுவனங்களை பதிவு செய்யும் நடைமுறைகள், இவ்வாறான செயற்திட்டத்திற்காக உரிய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரத்தினைப் போல உள்ளக பணம் அனுப்புதல்கள் சம்பந்தமாக வங்கியாளர் செயற்பட வேண்டிய முறைமையைப் பரீட்சித்தல் ஆகிய துறைகள் அறிக்கையின் கணக்காய்வு நோக்கெல்லையாக இனங்காணப்பட்டிருந்தது.

## 5. நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள் (Limitation)

---

5.1 பரிசோதனைக்கு உட்படுகின்ற நிறுவனம் ஒரு தனியார் கம்பனி என்பதனால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதன் புத்தகங்களைப் பரீட்சித்தல் மற்றும் பௌதீக ரீதியாக பிரவேசித்தல் மட்டுப்படுத்தப்படல்.

5.2 பணத்தை தூய்மைப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய முழுமையான பரிசோதனைக்காக சட்டரீதியான நிதிஏற்பாடு மற்றும் நுழைதல் தடை காணப்படல்

## 6. நிறுவகக் கட்டமைப்பு இனங்காணல்

-----------------------------------------------------------

விடயத்திற்குட்பட்ட பல்கலைக்கழகமானது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு பெயர்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனவே மட்டக்களப்பு பல்கலைக்கழ கல்லூரி, மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனி, மட்டக்களப்பு கெம்பஸ் கம்பனி கல்விக் கல்லூரி அல்லது பல்கலைக்கழகமாக கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள உள்ளடக்கமானது ஒரே நிறுவனத்திற்குரியதாகும்.

## 7. நடைமுறை

------------------

### 7.1 தொழில்சசார் பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவிடமிருந்து பெடிகளோ யூனிவசிட்டி கொலேஜ் (தனியார்) கம்பனிக்கு தொழில்சார் கல்விக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பின்னணி தகவல்கள்**

7.1.1 ஹிரா தொழில்சார் கல்வி நிறுவனம் என்ற பெயரில் தொழில்சார் பயிற்சி நிறுவனத்தை பதிவு செய்து கொள்வதற்காக தொழில்சார் கல்வி ஆணைக்குழுவிற்கு ஹிரா மன்றத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்குப் பரிகாரமாக தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயத்தினால் 2013 மார்ச் 21 ஆந் திகதியிடப்பட்ட TVEC/4/5/3 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஹிரா தொழில்சார் கல்வி நிறுவனம் தமது ஆணைக்குழுவில் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கவில்லை எனத் தெரிவித்து ஹிரா மன்றத்தின் செயலாளருக்கு கடிதம் வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 01) எவ்வாறாயினும் மேற்கூறிய விண்ணப்பம் TVEC/4/5/3 ஆம் இலக்க கோவையின் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 2013 மே 20 ஆந் திகதி அப்போதைய பிரதி அமைச்சர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் மட்டக்களப்பு பல்கலைக்கழ கல்லூரி (Batticaloa Campus College) என்ற பெயரில் தொழில்சார் பயிற்சி நிறுவனத்தை பதிவு செய்வதற்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரம் மாத்திரம் கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 02)

7.1.2 தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் TVEC/4/5/3 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பாடநெறி உள்ளடக்கம் குறிப்பிடப்படவில்லை என்பதும், பதிவிற்கு முன்னர் அந்த பாடநெறி தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறும் ஹிரா மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2013 ஏப்ரல் 13 ஆந் திகதி அப்போதைய பொருளாதார

அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் தான் ஹிரா மன்றத்தின் தலைவர் எனவும் ஹிரா மன்றத்தின் மூலம் தொழில் கல்வியினை வழங்குவதற்காக தொழில்சார் கல்வி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு தாம் கருதுவதாகவும் எனவே இதற்கு அங்கீகாரம் வழங்குமாறும் வேண்டிக் கொண்டு அப்போதைய இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கடிதத்தினுள் சிறு குறிப்பொன்றினை இட்டு 2013 மே மாதம் 02 ஆந் திகதி இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது (பின்னிணைப்பு - 03)

7.1.3 பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களின் வேண்டுதலுக்குப் பரிகாரமாக இளைஞர் விவகார அமைச்சினால் இலங்கை ஹிரா மன்றத்திற்கு தொழில்சார் கல்வி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்கான அனுமதியினை வழங்கி 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதியிலிருந்து 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அதுல்படுத்தும் வகையில் 03 ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையானது கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைக்காக ஹிரா மன்றத்தின் தலைவர் ஹிஸ்புல்லா அவர்கள் மற்றும் அப்போதைய இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர், தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளரால் 2013 யூன் 11 ஆந் திகதி கையொப்பம் இடப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 04)

7.1.4 புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒவ்வொரு தரப்பினரும் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் மற்றும் பொதுப் பொறுப்புக்கள் பின்வருமாறாகும்.

**முதலாவது தரப்பினரான தொழில்சார் பயிற்சி திறன் அபிவிருத்தி அமைச்சின் பொறுப்புக்கள்**

---

- மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் கட்டுப்பாட்டுச் சபைக்காக (Govering Body) இரண்டு பிரதிநிதிகளை நியமித்தல்.

- பயிற்சிகளுக்கு தேவையான வளங்கள், தர நியமங்கள், சுற்றறிக்கைகள், ஆலோசனைகள் என்பவற்றை வழங்குதல்.

- தொழில்சார் கல்வி ஆணைக்குழு மற்றும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழத்தினூடாக கற்கை நெறிகளுக்கான ஒப்புதல்கள் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல்.

- மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் டிப்ளோமாதாரர்களுக்காக தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மூலம் பட்ட கற்கை நெறிகளை உருவாக்குதல்.

**இரண்டாம் தரப்பினராக ஹிரா மன்றத்தின் பொறுப்புக்கள்**

---

- அரசாங்க மற்றும் தனியார் பங்குபற்றல் தொழில்முயற்சியாக மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்தல்.

- மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் நிருவாக சபைக்கு இரண்டு பிரதிநிதிகளை நியமித்தல்.

- இயந்திரங்கள், உபகரணங்கள், கட்டிடங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

- தொழில்சார் பயிற்சி அமைச்சு மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி அங்கீகரித்த தொழில்சார் பயிற்சி கற்கை நெறிகளை நடாத்துதல்.

- தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்படியான மேற்பார்வை பொறிமுறைக்காக உதவியளித்தல்.

**பொதுவான பொறுப்புக்கள்**

---

- பல்கலைக்கழக கற்கை நெறிகளை நடாத்துவதற்காக மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்குமிடையே ஒரு உடன்படிக்கையினை ஏற்படுத்திக்கொள்ளல்.

- இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர்களுக்கும் அனைத்து கற்கை நெறிகளையும் கற்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகளுக்காக வழிகாட்டிகளைத் தயாரித்தல் என்பன தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழககத்தின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7.1.5 புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 2013 யூன் 18 ஆந் திகதி இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரால் ஹிரா மன்றத்தினால் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழ கல்லூரிக்கு தேசிய தொழில்சார் சான்றிதழ் (NVQ) வழங்கும் கற்கை நெறிகளை நடாத்துவதற்கு தேவையான இயலுமை காரணப்படுகின்றதா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மூன்று நபர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 05)

7.1.6 உத்தேச தொழில்சார் கல்வி நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு உத்தேச கட்டிடத்தின் தரை அளவும் காணியின் அளவும், நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் ஆண் மாணவர்களுக்காக மாத்திரம் தொழில்சார் கல்வியினை வழங்குவதற்கு உத்தேசித்திருத்தல் என்பன சம்பந்தமாக சிக்கல்கள் கொண்டுள்ளமை 2013 யூன் 24 அந் திகதி இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்று நபர்கள் கொண்ட குழுவின் அறிக்கையின் மூலம் (பின்னிணைப்பு 06) சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

7.1.7 ஆண் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக சிக்கல் காணப்பட்டமை மாத்திரம் சரிசெய்யப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் எந்த ஒரு பிரசைக்கும் தொழில்சார் கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் தொழில்சார் கற்கை நெறிகளுக்கு சேர்த்துக்கொள்வதென இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருக்கு ஹிரா மன்றத்தின் தலைவர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் 2013 யூலை 02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 07) தெரிவிக்கப்பட்டிருந்தது.

7.1.8 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஹிரா மன்றத்தின் தலைவரின் வேண்டுகோளுக்கான (பின்னிணைப்பு - 08) பரிகாரமாக 2016 செப்தம்பர் மாதம் டெய்லி மிரர் பத்திரிகை அறிவித்தலின் மூலம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 09)

7.1.9 NVQ கற்கை நெறிக்காக ரூபா 216,000 தொகையான கற்கைநெறிக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குமாறு ஹிரா மன்றத்தின் தலைவர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வேண்டிக்கொண்டிருந்தும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரினால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுமாறும், கட்டணத்தை அறவீடு செய்வதற்கு தேவை ஏற்படுமாகவிருந்தால் புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்தம் செய்து கொள்ளுமாறும்

தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதி கட்டணத்தை அறவிடக்கூடிய வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்தம் செய்யுமாறு ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரிடம் வேண்டுகோள் (பின்னிணைப்பு - 10) விடுவிக்கப்பட்டிருந்தும் செயலாளரால் அதற்கு பதிலழிக்கப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

7.1.10 கட்டணத்தை அறவிட்டு கற்கை நெறிகளை நடாத்தும் சந்தர்ப்பத்தை மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கு வழங்குவதற்கும் கற்கைநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற மாவணர்களின் எண்ணிக்கையில் 5 சதவீதத்திற்கு முழுமையான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கும் தொழில்சார் பயிற்சி அமைச்சிற்கு முடியுமான வகையில் 2014 பெப்ரவரி 10 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் 3(v) ஆம் பிரிவு 2014 மே மாதம் 13 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 11)

7.1.11 2014 மே 13 ஆந் திகதி மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியானது இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும அவர்களால் உத்தியோகபூர்வ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது, (பின்னிணைப்பு - 12)

7.1.12 ஹபரண மட்டக்களப்பு பிரதான வீதியில் பூனானி நகரத்தில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தில் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் ஒரு பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளது எனவும் கிழக்கு பல்கலைக்கழகம் 1981 இலிருந்து 1988 வரை மேற்கூறிய பெயரில் செயற்பட்டு வந்ததனால் இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழகம் முன்னர் அறிமுகமாகிய பெயரில் வேறு ஒரு நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் உள்ள தொடர்புகள் பற்றி சட்டரீதியான பிணைப்புக்களை ஏற்படுத்தலாம் என்பதனால் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரினால் 2014 யூன் 05 ஆந் திகதி அப்போதைய தொழில்சார் பயிற்சி அமைச்சிற்கு (பின்னிணைப்பு - 13) தெரிவிக்கப்பட்டிருந்தது.

**7.2 இலங்கை மஹாவெலி அதிகாரசபையினால் மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனிக்கு (ஹிரா மன்றத்திற்கு) காணிகளை விடுவித்தல்**

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.2.1 பொறியியல் கற்கை நெறிகளை நடாத்துவதற்காக தொழில்சார் பயிற்சி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்காக மஹவெலி காணிகள் 35 ஏக்கர்களை வழங்குமாறு வேண்டி எம்.ஏ.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் 2013 மே 02 ஆந் திகதி தனது

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பதவியின் உத்தியோக முத்திரையைப் பயன்படுத்தி இலங்கை மஹவெலி அதிகாரசபைக்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 14)

7.2.2 இலங்கை நில அளவையாளர் திணைக்களம் 270016 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் காணித்துண்டு இலக்கம் 800, 804, 808, 812 ஆக காட்டப்பட்டுள்ள 35 ஏக்கர் பரப்பளவான, ஜயந்தியாய, வானைச்சேனை, மட்டக்களப்பில் அமைந்துள்ள மஹவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதி மஹவெலி பீ வலயத்தில் அசேலபுர பிரிவு முகாமையாளரால் வருடாந்த உத்தரவுப் பத்திரத்தின் மூலம் இலங்கை ஹிரா மன்றத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் வரை வருடாந்தம் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 15)

7.2.3 மஹவெலி பீ வலயம் வெலிகந்த பிரதி வதிவிட முகாமையாளரினால் (காணிகள்) 2016 ஒக்தோபர் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 16) ஹிரா மன்றத்திற்கு மேற்கூறிய 04 காணித்துண்டுகள் சம்பந்தமாக பிற்சேர்க்கை ஆவணத்தில் காணிகளைப் பயன்படுத்துதல் சம்பந்தமான நிரலில் ''ஏனையவை'' எனக் குறிப்பிட்டு ''ஹிரா மன்றத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குதல்'' எனத் திருத்தப்பட்டு திருத்திய பிற்சேர்க்கை ஆவணத்தை தயாரித்து தருமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுகோளுக்கான மறுதலிப்பாக 2016 நவம்பர் 25 ஆந் திகதி சிரேஷ்ட நில அளவை அதிகாரி - மட்டக்களப்பு அவரினால் பிற்சேர்க்கை ஆவணம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 17)

7.2.4 மஹவெலி அதிகாரசபையினால் வருடாந்த குத்தகை அடிப்படையில் ''ஹிரா மன்றத்திற்கு'' வழங்கப்பட்ட மேற்கூறிய காணித்துண்டுகளை ஹிரா மன்றத்தினால் திருத்தப்பட்ட ''பெட்டிகளோ கெம்பஸ் தனியார் கம்பனி'' என்ற பெயரில் மாற்றம் செய்து வழங்குமாறு 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி ஹிரா மன்றத்தின் தலைவரினால் விடுக்கப்பட்ட வேண்டுதலுக்கு (பின்னிணைப்பு - 18) மறுதலிப்பாக அதிகாரசபையின் பணிப்பாளரால் 2016 நவம்பர் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 19) மஹவெலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது எனத் தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

7.2.5 மஹவெலி அதிகாரசபையின் பணிப்பாளரின் (காணிகள்) கையொப்பத்தின் மற்றும் மகாவெலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சிபார்சின் அடிப்படையில் 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி 35 ஏக்கர் பரப்பளவுள்ள மேலே குறிப்பிட்ட 04 காணித்துண்டுகள் பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனிக்கு நீண்டகால குத்தகைக்கு

சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுதல் 2017 திசெம்பர் 08 ஆந் திகதி மகவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயலாளரால் சிபார்சு செய்யப்பட்டு அதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக சனாதிபதியின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 20)

7.2.6 வருடாந்த அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் வரை ஹிரா மன்றத்திற்கு வழங்கப்பட்ட மேற்கூறிய 04 காணித்துண்டுகள் 2018 பெப்ரவரி 01 ஆந் திகதி நீண்டகால குத்தகை உறுதியின் அடிப்படையில் 2013 யூலை 12 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 30 ஆண்டுகள் காலத்திற்கு பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 21)

7.2.7 ஹிரா மன்றத்தின் தலைவரால் 2017 மார்ச் 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 22) உத்தேச பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு வதிவிட வசதிகளை வழங்குவதற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நீண்டகால குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 35 ஏக்கர் காணிக்கு அருகாமையிலுள்ள மேலும், 45 ஏக்கர் காணியை நீண்டகால குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக மஹவெலி அதிகாரசபைக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

7.2.8 மேற்கூறிய விண்ணப்பம் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி நடைபெற்ற மஹவெலி அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் (பின்னிணைப்பு - 23) அந்த அங்கீகாரத்துடன் 2017 ஏப்ரல் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 24) மஹவெலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மஹவெலி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதற்காக அவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 7.3 மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியை இலங்கை முதலீட்டுச் சபை செயற்திட்டமாக உடன்படிக்கை செய்துகொள்ளல்

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.3.1 இலங்கை ஹிரா மன்றத்தின் தலைவர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் 2015 யூன் 12 ஆந் திகதி முதலீட்டுச் சபையின் ஒரு புதிய செயற்திட்டமாக மட்டக்களப்பு பிரதேசத்தில் ஒரு உயர் கல்வி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 25)

அந்த விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பு கடிதம் மற்றும் நிதித் திட்டத்தின் பிரகாரம் (பின்னிணைப்பு - 26) அதற்காக 50 ஏக்கர் மஹவெலி காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் அச்செயற்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 40.2 மில்லியன் வெளிநாட்டு முதலீடு மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 5.55 மில்லியன் உள்நாட்டு முதலீட்டினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

7.3.2 முதலீட்டுச் சபையின் உதவிப் பணிப்பாளரினால் (முதலீட்டு மதிப்பீடுகள்) அதன் நிறைவேற்று பணிப்பாளருக்கு (முதலீட்டு மதிப்பீடுகளும் மேம்பாடும்) 2015 யூன் 23 ஆந் திகதி மேற்கூறிய விண்ணப்பப்படிவம் தொடர்பாக பின்வரும் சிபார்சுகளை உள்ளடக்கிய உள்ளக குறிப்பு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 27)

I. செயற்திட்டத்திற்காக உத்தேச காணியை ஆகக்குறைந்தது 30 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

II. வெளிநாட்டு முதலீட்டு வழிகளாக இருந்தால் முழுமையான நிதித் திட்டத்துடன் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

III. செயற்திட்டமானது புதிய செயற்திட்டமாக இருக்க வேண்டுமெனவும் 3 ஆண்டுகளுக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும்.

IV. உத்தேச கல்வி நெறிகளுக்கு மத்தியில் சுற்றுலா, சுகாதாரக் கல்வி ஆகிய கற்கை நெறிகளுக்குரிய விபரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

V. முதலீட்டுத் திட்டங்களையும் விபரமான நிர்மாணத் திட்டங்களையும் கட்டங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. மேற்கூறிய திருத்தங்களுடன் நீங்கள் இணங்குவதாக இருந்தால் முதலீட்டாளரிடமிருந்து திருத்திய விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பது.

7.3.3. பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜ் தனியார் கம்பனியின் தலைவராக ஏ.எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா அவர்களினால் முதலீட்டுச் சபைச் செயற்திட்டமாக மட்டக்களப்பு பிரதேசத்தில் உயர்கல்வி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்காக முதலீட்டுச் சபைக்கு 2015 யூலை 17 ஆந் திகதி இன்னுமொரு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 28) அந்த விண்ணப்ப படிவத்தின் பிரகாரம் கம்பனியின் பங்கு மூலதனத்தில் 95 சதவீதம் ஹிரா மன்றத்திற்கும் மிகுதி 05 சதவீதமானது ஹிராஸ் ஹிஸ்புல்லா என்ற நபருக்கும் சொந்தமானது எனத்

தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், மொத்த மூலதனமான ஐக்கிய அமெரிக்க டொலர் 4.75 மில்லியன் முதலீடாகவும் மிகுதி ஐக்கிய அமெரிக்க டொலர் 1.55 மில்லியன் உள்நாட்டு நிதியிலிருந்து முதலீடு செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

7.3.4 அந்த விண்ணப்பப்படிவம் கிடைத்த 2015 யூலை 17 ஆந் திகதியே முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரால் ஹிஸ்புல்லா அவர்களுக்கு ஒரு கடிதத்தை வழங்கி (பின்னிணைப்பு - 29) விண்ணப்பப் படிவத்தினை அவதானிப்பு மற்றும் சிபார்சுகளுக்காக உயர்கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் அவதானிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முதலீட்டுச் சபையின் மதிப்பீட்டிற்காக அனுப்பிவைக்குமாறும் பின்னர் முறைப்படியான ஒரு கடிதத்தின் மூலம் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதுவரை உத்தேச கம்பனியை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம் எனவும் உருவாக்குவதற்கு முன்னர் அதன் அமைப்பு அகவிதியினை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சட்டம் அவர்களின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

7.3.5 உதவிப் பணிப்பாளர் (முதலீட்டு மதிப்பீடுகள்) அவர்களினால் பின்னிணைப்பு - 28 இல் தரப்பட்ட 2 ஆவது விண்ணப்பப் படிவத்தை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு மதிப்பீடுகள்) அவர்களுக்கு உள்ளக குறிப்பு பத்திரத்தின் மூலம் பின்வரும் சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (பின்னிணைப்பு - 30)

(i) செயற்திட்டத்திற்காக 05 ஆண்டுகள் வரி நிவாரண காலம் வழங்கப்பட வேண்டும் என.

(ii) செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக 02 ஆண்டுகள் வரி நிவாரண காலம் வழங்கப்பட வேண்டும் என.

(iii) கம்பனியானது நாணயமாற்று கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு உட்பட வேண்டும் என

(iv) கம்பனியின் வணிகச் செயற்பாடுகள் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு ஒரு ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும்.

7.3.6 முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரால் அவரின் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 31) உரிய விண்ணப்பப் படிவம் உத்தேச கம்பனியின் அமைப்பு அகவிதியில் மற்றும் பதிவு செய்வதற்குரிய ஏனைய தகவல்களானது உயர் கல்வி அமைச்சு செயலாளரின் சிபார்சு மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

7.3.7 பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனியின் அமைப்பு அகவிதியில் பட்டம் வழங்குவது சம்பந்தமான பிரிவு உள்ளடக்கப்படாததனால் மற்றும் முதலீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் ஒரு பயிற்சி நிறுவனத்திற்கான செயற்திட்டமாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மேற்கூறிய வேண்டுதலானது உயர் கல்வி அமைச்சு விடயத்திற்குரியதல்ல என உயர் கல்வி அமைச்சினால் 2015 நவம்பர் 18 ஆந் திகதி முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 32)

7.3.8 பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜின் தலைவர் ஏ.எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா அவர்களினால் 2015 திசெம்பர் 14 ஆந் திகதி முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 33) ஹிரா மன்றத்தினால் இளைஞர் விவகார அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தற்பொழுது உயர் டிப்ளோமா சான்றிதழை வழங்குகின்ற ''பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜ்'' என்ற பெயரில் ஒரு உயர்கல்வி நிறுவனம் செயற்பட்டு வருகின்றது எனவும் அதன்மூலம் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை நடாத்துவதற்காக உயர்கல்வி அமைச்சின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது எனவும் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக அண்ணளவாக 50 மில்லியன் டொலரினை செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து முதலீட்டுச் சபை செயற்திட்டமாக அங்கீகாரத்தினை வழங்குமாறும் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தது.

7.3.9 அமெரிக்க டொலர் 4.75 மில்லியன் முதலீட்டுடன் ஒரு உயர்கல்வி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக 2015 யூலை 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்திற்கு முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரால் அவரின் 2016 சனவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 34) ஹிரா மன்றத்தின் தலைவர் ஏ.எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா அவர்களுக்குத் தெரிவித்து அனுப்பப்பட்டிருந்தது.

7.3.10 பட்டம் வழங்கும் வசதிகளுடனான ஒரு உயர் கல்வி நிறுவனத்தை தோற்றுவித்தல் மற்றும் பட்டத்தை வழங்குவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழங்களுடன் இணைந்து செயற்படுவதனை உள்ளடக்கி பெடிகலோ கெம்பஸ் (தனியார்) கம்பனியின் குறிக்கோளை மாற்றுவதற்காக அங்கீகாரத்தினை வேண்டி பெட்டிகலோ கெம்பஸ் (தனியார்) கம்பனியின் தலைவர் ஏ.எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா அவர்களினால் முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2016 மே 17 ஆந் திகதி ஒரு கதடிம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 35)

7.3.11 இலங்கை முதலீட்டுச் சபையினால் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக அங்கீகாரத்தினை வழங்கி பெட்டிகலோ கெம்பஸ் (தனியார்) கம்பனியுடன் 2016 மே 19 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 36)

7.3.12 பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனியின் தலைவரினால் கம்பனியின் குறிக்கோளை மாற்றம் செய்வதற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக உயர்கல்வி அமைச்சின் எதிர்ப்பு உள்ளதா என்பதனை விசாரித்து 2016 யூன் 02 ஆந் திகதி முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரால் உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (அரசசார்பற்ற உயர்கல்வி) அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. (பின்னிணைப்பு - 37)

7.3.13 உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி) அவர்களின் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 38) பட்டத்தினை வழங்கும் நிலைமையினைத் தவிர்த்து எனக் குறிப்பிட்டு ஏனைய திருத்தங்களுக்காக இணக்கம் வழங்கப்பட்டிருந்தது.

7.3.14 முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (பொறியியல் அங்கீகாரம்) அவர்களினால் 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் செயற்திட்டத்தை செயற்படுத்திச் செல்லும் போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரத்தினை உள்ளடக்கி ஹிரா மன்றத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 39)

## 7.4 இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கினூடாக பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்களைப் பெறுதல்.

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.4.1 பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனியின் பெயரில் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் பெயரில் இலங்கை வங்கியின் பல்வேறு கிளைகளில் 14 வங்கி கணக்குகள் பேணப்பட்டு வந்திருந்தன. விபரம் பட்டோலை இலக்கம் 01 இல் தரப்பட்டுள்ளது.

7.4.2 மேற்கூறிய கணக்குகளுக்கு மத்தியில் 04 இலங்கை வங்கி கணக்குகளுக்கு 2016 - 2017 ஆண்டுகளின் போது ரூபா 4,123,859,831 பெறுமதியான வெளிநாட்டு பணம் அனுப்புதல்கள் கிடைத்திருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 01 பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் பெயரில் உள்ள வங்கி கணக்குகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்கள் 2016 - 2017

| **கணக்கு இலக்கம்** | **கணக்கு உரிமையாளர்** | **பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பணம் அனுப்புதல்களின் பெறுமதி** |
|---|---|---|
| ------------- | ---------------------------------- | ------------------------------------------ |
| | | ரூபா |
| 1631952 | இலங்கை ஹிரா மன்றம் | 313,128,281 |
| 78495137 | மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனி | 3,640,939,488 |
| 80961953 | ஏ.எம்.ஏ.லங்கா தனியார் கம்பனி | 144,978,158 |
| 74791337 | மலிக் அப்துல்லா பின் அப்துல் அசீஸ் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி | 24,849,903 |
| | | --------------------- |
| | | 4,123,895,831 |
| | | ========== |

ஒவ்வொரு வங்கி கணக்கிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்கள் சம்பந்தமான விபரம் பட்டோலை இலக்கம் 02 இல் தரப்பட்டுள்ளது.

7.4.3 மேற்கூறிய பணம் அனுப்புதல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி கணக்குகளை ஆரம்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்ததன் பின்னர் 2006 இன் 06 ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வங்கியினால் தயாரிக்கப்படுகின்ற வாடிக்கையாளரை அடையாளங்காணும் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் பின்வருமாறாகும்.

அட்டவணை இலக்கம் - 05 வாடிக்கையாளரை அடையாளங்காணும் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள்

| கணக்கு இலக்கம் | கணக்கின் பெயர் | கணக்கின் நோக்கம் | நிதி உட்பாய்ச்சல் மூலம் | எதிர்பார்த்த மாதாந்த சராசரி வைப்பின் பெறுமதி | செல்வம் உருவாகியுள்ள முறைமை | ஆபத்தின் தன்மை | அரசியல் தொடர்புகள் உள்ளனவா என்பது (பின்னிணைப்பு 40 மற்றும் 41) |
|---|---|---|---|---|---|---|---|
| -------------- | --------------------------- | ---------------- | -------------------- | ------------------- rூபா | ----------------------- | ---------------- | ------------------------------------ |
| 80940330 | ஏ.எம்.ஏ லங்கா தனியார் கம்பனி | வியாபார கொடுக்கல் வாங்கல் | விற்பனைகள் மற்றும் வியாபார வருமானம் | 100,000 - 500,000 | முதலீடுகள் மற்றும் முதலீட்டு வருமானம் | குறைவு | நான்கு பணிப்பாளர்களில் ஒருவரான ஹிராஸ் ஹிஸ்புல்லா அவர்கள் அரசியலுடன் தொடர்புபட்ட நபராவார். |
| 78495137 | பெடிகலோ கெம்பஸ் கொலேஜ் தனியார் கம்பனி | வியாபார கொடுக்கல் வாங்கல் | ஏனையவை (வெளிநாட்டு பணம் அனுப்புதல்கள்) | 10 மில்லியனுக்கு அதிகம் | வெளிநாட்டு பணம் அனுப்புதல்கள் மற்றும் வியாபார வருமானம் | உச்ச அளவு | கம்பனியின் தலைவர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகும். |
| 74791337 | மலிக் அப்துல்லா பின் அப்துல் அசீஸ் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி | சமூக மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் | வெளிநாட்டு உதவி அல்லது நன்கொடைகள் | 500,000 - 01 மில்லியனுக்கு இடையே | தொழில்சார் அல்லது தொழில் வாய்ப்புக்களின் மூலம் | கருத்தில் கொள்ளப்பட வில்லை. | கம்பனியின் தலைவர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமாகும். |

## 7.5 மட்டக்களப்பு பல்கலைக் கழகத்திற்கு பட்டம் வழங்கும் இயலுமையினைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக உயர் கல்வி அமைச்சுடனான கொடுக்கல் வாங்கல்கள்

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.5.1 மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் தலைவர் ஏ.எம்.எல்.எம் ஹிஸ்புல்லா அவர்களினால் 2015 யூலை 03 ஆந் திகதி பாராளுமன்ற கடிதத் தலைப்பை பயன்படுத்தி தனது கல்லூரிக்கு பட்டம் வழங்கும் அனுமதியை வழங்குமாறு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 42)

7.5.2 மேற்கூறிய வேண்டுகோளை கவனித்துப் பார்ப்பதற்காக உயர்கல்வி அமைச்சிற்கு ரூபா 01 மில்லியன் செலுத்துமாறும் பட்டம் வழங்குவதற்கான தகைமைகளையும் கற்கை நெறிகளின் விபரத்தையும் உள்ளடக்கிய கற்கை நெறிகளின் விபரத்தையும் உள்ளடக்கிய முழுமையான கோவைகளின் 6 பிரதிகளை அமைச்சிற்கு வழங்குமாறும் உயர்கல்வி அமைச்சின் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவன பிரதிப் பணிப்பாளரால் 2015 யூலை 07 ஆந் திகதி மட்டக்களப்பு பல்லைக்கழக கல்லூரியின் தலைவருக்கு தெரிவித்து அனுப்பப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 43)

7.5.3 மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியினால் 2015 யூலை 07 ஆந் திகதி மேற்கூறிய கட்டணம் உயர்கல்வி அமைச்சிற்கு செலுத்தப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 44)

7.5.4 உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரினால் அக்கல்லூரியில் நிறுவனரீதியான மீளாய்வினை மேற்கொள்வதற்காக 2015 செப்தெம்பர் 22 ஆந் திகதி நியமிக்கப்பட்ட (பின்னிணைப்பு - 45) ஐந்து நபர்கள் கொண்ட குழு 2016 சனவரி 06, 07 மற்றும் 08 ஆந் திகதிகளில் கல்லூரியினை பௌதீக ரீதியாகப் பரீட்சித்தல் (பின்னிணைப்பு - 46) மற்றும் அது தொடர்பாக கோவைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தனது மீளாய்வு அறிக்கையினை 2016 பெப்ரவரி 19 ஆந் திகதி அமைச்சிற்கு வழங்கியிருந்தது. (பின்னிணைப்பு 46 மற்றும் 47)

7.5.5 அமைச்சு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனப் பிரிவின் மேலதிக செயலாளரால் மேற்கூறிய மீளாய்வு அறிக்கையிலுள்ள சிபார்சுகளை மேலும் மேம்படுத்தி இரண்டாவது நிறுவன ரீதியான மீளாய்வுக் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்து கல்லூரியின் தலைவருக்கு 2016 மார்ச் 15 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 48)

7.5.6 மேற்கூறிய நிறுவன ரீதியான மீளாய்வுக் குழுவினால் 2017 பெப்ரவரி 02 ஆந் திகதியிலிருந்து மார்ச் 01 ஆந் திகதி வரையான காலத்தில் பௌதீகப் பரிசோதனையுடன் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் கோவைகளை மீளாய்வு செய்து 2017 யூலை 01 ஆந் திகதி இரண்டாவது நிறுவன ரீதியான மீளாய்வு அறிக்கை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 49)

7.5.7 மேற்கூறிய இரண்டாவது அறிக்கை அமைச்சிற்கு கிடைத்ததன் பின்னர் அது ஒப்புதல் அளித்தல் மற்றும், தரச்சான்றிதழ் தொடர்பான குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவினால் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்காக ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனைக் குழுவினால் 2018 திசெம்பர் 13 ஆந் திகதி தனது அறிக்கை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 50)

I. நிதி இயலுமை, ஸ்திரத்தன்மை மற்றும் முகாமைத்துவத்திலான குறைபாடுகள்.

II. உத்தேச தன்மையிலான மற்றும் அளவிலான கல்வி நிறுவனமொன்றை பேணிச் செல்ல போதிய அனுபவமின்மை மற்றும் அனுபவமுள்ள முகாமைத்துவச் சபையொன்று காணப்படல்.

III. அபாய முகாமைத்துவத்திற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டிராமை.

IV. இவ்வாறானதொரு நிறுவனமொன்றில் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக கூட்டிணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை.

## 7.6 அரச சார்பற்ற அமைப்பு செயலகத்தில் பதிவு செய்வதற்காக ஹிரா மன்றததினால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தமை சம்பந்தமான அவதானிப்பு

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.6.1 ஹிரா மன்றத்தினால் அரச சார்பற்ற அமைப்பாக பதிவு செய்வதற்காக அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலகத்திற்கு 2011 யூலை 06 ஆந் திகதி விண்ணப்பப் பத்திரம் (பின்னிணைப்பு - 51) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

7.6.2 அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளரால் 2011 ஆகஸ்ட் 2011 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 52 மற்றும் 53) வெளிநாட்டு விவகார அமைச்சிடமிருந்து மற்றும் அரசாங்க உளவுத்துறை தலைவர்களிடமிருந்து மேற்கூறிய நிறுவனம் சம்பந்தமாக அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது.

7.6.3 வெளிநாட்டு விவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (பல்தரப்பினர் தொடர்புகள்) அவர்களினால் 2011 செப்தெம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தின் (பின்னிணைப்பு - 54) மூலம் மேற்கூறிய நிறுவனம் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் முகவர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளமைக்கான தகவல்கள் இல்லாததனால் ஹிரா மன்றம் சம்பந்தமாக அமைச்சின் அவதானிப்புக்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

7.6.4 கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் பிரகாரம் ஹிரா மன்றத்தின் தலைவரைத் தவிர்த்து ஏனைய அங்கத்தவர்கள் சம்பந்தமாக பாதகமான தெரியப்படுத்துதல்கள் காணப்படுவதனால் தேசிய உளவுத்துறைப் பணியகத்திற்கு மேற்கூறிய நிறுவனத்தை சிபார்சு செய்ய முடியாது என 2011 ஒக்தோபர் 18 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு - 55) தேசிய உளவுத்துறைப் பிரிவினால் தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

7.6.5 அரசாங்க உளவுத்துறைப் பணியகத்தால் சிபார்சு செய்யப்படாததனால் ஹிரா மன்றத்தை அரச சார்பற்ற அமைப்பாக பதிவு செய்ய முடியாது என 2012 ஏப்ரல் 18 ஆந் திகதி அரச சார்பற்ற அமைப்புக்களின் தேசிய செயலகத்தால் ஹிஸ்புல்லா அவர்களுக்கு தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 56)

## 7.7 மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியைச் செயற்படுத்துவதற்காக காத்தான்குடி நகர சபையிடமிருந்து ஒரு கட்டிடத்தை குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்.

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.7.1 காத்தான்குடி நகர சபையின் தலைவரினால் 2014 மே 10 ஆந் திகதி ஒரு குத்தகை உடன்படிக்கையின் மூலம் மட்டக்களப்பு நகர சபையின் நூல் நிலையக் கட்டிடம் மற்றும் நிருவாகக் கட்டிடத்தின் ஒரு பகுதி மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கு 8 ஆண்டுகள் காலத்திற்காக ரூபா 5,000 மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 57)

7.7.2 மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியின் நிருவாக உத்தியோகத்தரால் 2014 நவம்பர் 18 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி தற்பொழுதும் நகர சபைக் கட்டிடத்தில் செயற்படுவதாகவும் அக்கட்டிடம் 08 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தலைவர், காத்தான்குடி நகரசபைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 58 மற்றும் 95)

7.7.3 குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அக்கட்டிடம் தற்பொழுது தெயட கிருல செயற்திட்டத்தின் கீழ் நகர சபை நூல் நிலையத்தை செயற்படுத்தும் குறிக்கோளில் ரூபா 40 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டதுடன் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 60 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட மற்றைய குத்தகைக்கு வழங்கப்பட்ட கட்டிடத்தை நகர சபையின் நிருவாக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

7.7.4 காத்தான்குடி நகர சபையின் செயலாளரினால் 2017 ஏப்ரல் 18 ஆந் திகதி மேற்கூறிய குத்தகைக் கட்டிடத்திற்காக அரசாங்க மதிப்பீட்டாளரின் குத்தகைப் பெறுமதியை வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுதல் கடிதத்திற்கு பதிலாக 2017 யூன் 06 ஆந் திகதி கிழக்கு மாகாண மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளரால் குத்தகை வாடகை சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 59)

7.7.5 மேற்கூறிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பயன்படுத்திய கட்டிடத்திற்கான அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர் குத்தகை வாடகை மாதம் ரூபா 197,500 எனவும் நகர சபைக்குச் செலுத்தப்பட்டுள்ள குத்தகை வாடகை ரூபா 5,000 மாத்திரம் எனவும் அதற்கிணங்க உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து 2017 யூன் 30 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய நிலுவையான குத்தகை வாடகை ரூபா 8,475,000 என்பதனால் அந்த நிலுவையான குத்தகை வாடகையை விரைவாகச் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 60)

7.7.6 மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியினால் 2018 மார்ச் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அத்திகதியிலிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட நகர சபைக் கட்டிடத்தை மீள ஒப்படைப்பதாக நகர சபைச் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 61)

## 7.8 குத்தகைக் காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரத்தினை வழங்குதல் சம்பந்தமான வாகன பிரதேச சபையின் கடமைகள்

---

**பின்னணித் தகவல்கள்**

---

7.8.1 மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியால் மேற்கூறிய குத்தகை காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்திற்காக வாகரை பிரதேச சபைக்கு பின்வருமாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (பின்னிணைப்பு - 62)

அட்டவணை இலக்கம் 03 - குத்தகை காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்திற்காக கொடுப்பனவு செய்தல்.

| தொடர் இலக்கம் | பற்றுச்சீட்டு இலக்கம் | திகதி | செலுத்திய பணம் | கொடுப்பனவு செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| 1 | 2547 | 2014/08/26 | 500.00 | விண்ணப்ப படிவ கட்டணம் |
| 2 | 2548 | 2014/08/26 | 500.00 | விண்ணப்ப படிவ கட்டணம் |
| 3 | 2962 | 2014/12/10 | 8,262.50 | புலனாய்வுக் கட்டணம் |
| 4 | 3630 | 2016/11/07 | 15,000.00 | கட்டிட திட்டத்தினை சரி செய்யும் கட்டணம் |
| 5 | 3677 | 2016/11/21 | 5,000.00 | கட்டிட திட்டத்தை சரிசெய்யும் கட்டணம் |
| | மொத்தம் | | 29,262.50 | |

7.8.2 இலங்கை பொலிசின் நிதி மோசடி புலனாய்வுப் பிரிவு மற்றும் தேசிய கணக்காய்வு செயலகத்தால் முறையே 2019 ஆகஸ்ட் 28 மற்றும் 2019 மே 22 ஆந் திகதிகளில் மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியால் மேற்கூறிய குத்தகைக் காணியில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணம் சம்பந்தமாக வாகரை பிரதேச சபையின் அங்கீகாரம் மற்றும் உரிய கோவைகளை வழங்குமாறு சபை செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 63 மற்றும் 64)

7.8.3 அந்த வேண்டுகோளுக்குரிய தகவல்களை வழங்குவதற்காக சபையில் கோவைகள் பேணப்படவில்லை எனவும் தற்பொழுது மேற்கூறிய விடயம் சம்பந்தமாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு கோவைகளை ஒப்படைக்கும் போது காணப்பட்ட ஒரு கோவை ஒப்படைக்கப்படவில்லை எனவும் நிர்மாணம் மேற்கொள்ளப்படும் காலப்பகுதியின் போது மேற்கூறிய விடயத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளதாகவும் அவரிடமிருந்து அது சம்பந்தமாக விசாரணை செய்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறும் தெரிவித்து 2019 மே 10 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளருக்கும் 2019 மே 14 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கும் வாகரை பிரதேச சபையின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 65 மற்றும் 66)

## 8. கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

**8.1 தொழில்சார் பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் பெட்டிகலோ யூனிவசிட்டி கொலேஜ் (தனியார்) கம்பனிக்கு தொழில்சார் கல்விக்கு அங்கீகாரத்தினை வழங்குதல்.**

---

8.1.1 ஒரு உயல்கல்வி நிறுவனமாகப் பதிவு செய்வதற்காக ஹிரா மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல் கடிதத்திற்கு பதிலாக அதற்குத் தேவையான தகமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஹிரா மன்றத்திற்கு 2013 மார்ச் 21 ஆந் திகதி தெரியப்பட்டுத்தியிருந்தும் பூர்த்தி செய்யப்படாத அத்தேவைப்பாடுகள் எவை என்பது குறிப்பிடப்படவில்லை.

8.1.2 மேற்படி 7.1.2 ஆம் பந்தியின் பிரகாரம், பிரதி அமைச்சரான எம்.எல்.எம்.ஏ.ஹிஸ்புல்லா தமது பாராளுமன்ற அமைச்சுப் பதவி மற்றும் பிரதி அமைச்சர் பதவி ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஹிரா மன்றம் எனும் தனியார் நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்காக செயற்பட்டிருந்தார்

8.1.3 தொழில்சார் கல்வி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்கு ஹிரா மன்றத்தினால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுகின்ற அடிப்படைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருக்காததன் காரணமாக தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் பதிவு செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தும் அந்த நிறுவனத்திற்கு பெட்டிகலோ பல்கலைக்கழக கல்லூரி என்ற பெயரிலான உயர்கல்வி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்காக இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் அனுமதியினை வழங்கி 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 03 ஆண்டுகள் காலத்திற்கு ஹிரா மன்றத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

8.1.4 அவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் உயர்கல்வி நிறுவனத்தை செயற்படுத்துவதற்காக தேவையான சாத்திய வளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய போதிலும், அவ்வாறான எதுவித பரிசோதனையும் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், உடன்படிக்கை செய்யப்பட்ட 05 நாட்களுக்குப் பின்னர் அமைச்சு செயலாளர் மூன்று நபர்கள் கொண்டு ஒரு குழுவினை நியமித்திருந்தார்.

8.1.5 மூன்று நபர்கள் கொண்ட குழுவினால் 2013 யூன் 24 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உத்தேச மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் ஒரு உயர்கல்வி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்கு

தேவையான அடிப்படை வசதிகளான நிதி ஸ்திரத்தன்மை, காணப்படுகின்ற கட்டிடங்களும் அவற்றின் போதுமான தன்மையும் என்பன சம்பந்தமான சிக்கல் பற்றி சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் கற்கை நெறிகளை நடாத்துவதற்காகத் தேவையான தரமிக்க காரணியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விரிவுரையாளர்கள், கற்கை நெறிகளின் உள்ளடக்கம் மற்றும் கற்கை நெறிகளுக்குத் தேவையான ஏனைய பௌதீக தேவைப்பாடுகள் சம்பந்தமான விடயங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த அறிக்கையின் பிரகாரம் ஒரு தொழில்சார் கல்வி நிறுவனமாக அமுல்படுத்துவதற்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கு தேவையான அடிப்படை வசதிகள் காணப்படுகின்றன என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

8.1.6 உடன்படிக்கை செய்யப்பட்ட முதலாவது தரப்பினரான தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் நிருவாக சபைக்கு இரண்டு பிரநிதிகளை நியமிப்பதனைத் தவிர புரிந்துணர்வு உடன்படிக்கையின் முதலாவது தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த மேலே 6.1.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எதுவித பொறுப்பும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிருவாக சபைக்கு நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் நிருவாக சபைக் கூட்டங்களுக்கு பங்குபற்றியுள்ளார்களா, நிருவாக சபைக் கூட்டங்களுக்கு அழைப்பிதழ் கிடைத்துள்ளதா மற்றும் நிருவாக சபைக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாக எதுவித தகவல்களும் தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சிடம் இல்லாததனால் நிருவாக சபைக் கூட்டங்களுக்காக அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் பங்குபற்றியுள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

8.1.7 உடன்படிக்கையின் முதலாவது தரப்பினரின் பொறுப்புக்களுக்கு மத்தியிலும் பொதுப் பொறுப்புக்களுக்கு மத்தியிலும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள பல்கலைக்கழகத்தின் பொறுப்புக்கள் காட்டப்பட்டுள்ள போதிய உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டதன் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் செயற்பாடுகள் சம்பந்தமாக தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் பங்களிப்பினைக் காட்டியுள்ளதனை அல்லது மேற்குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

8.1.8 NVQ கற்கை நெறிகளை நடாத்துவதற்குத் தேவையான தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தும் அவ்வாறான கற்கை நெறிக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதற்காக பல்கலைக்கழக கல்லூரியின் தலைவர் மேற்கொண்ட வேண்டுதலுக்கு அமைச்சு செயலாளரால் 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய கடிதத்தின்

மூலம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் முறையற்றது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

8.1.9 ஒரு உயர் கல்வி நிறுவனத்தை நடாத்துவதற்குரிய தகைமைகளை மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பூர்த்தி செய்திருக்கவில்லை என உறுதிப்படுத்தியிருந்த மூன்று நபர்கள் கொண்ட குழுவின் தலைவரே மீண்டும் பரீட்சிக்காது ஆணைக்குழுவின் 205 ஆவது கவுன்சிலுக்கு அதனை பதிவு செய்வதற்கான பத்திரத்தைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றிருந்தார். (பின்னிணைப்பு - 67)

8.1.10 மேற்கூறிய ஆணைக்குழுப் பத்திரத்திற்காக 2015 யூலை 09 ஆந் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் (பின்னிணைப்பு - 68) அதற்கு முன்னைய திகதியான 2015 மார்ச் 02 ஆந் திகதியை ஆணைக்குழுவில் பதிவு செய்த திகதியாக கருதி கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டு அத்திகதியிலிருந்து ஆணைக்குழுவின் அங்கீகரித்த கற்கை நெறிகளை நடாத்துவதற்காக கல்லூரிக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

8.1.11 பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 49 மாணவர்களுக்கு (பின்னிணைப்பு - 69) 2016 ஆம் ஆண்டின் போது தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்கற்கை நெறிகளுக்குரிய பாடத்திட்டத்தின் உள்ளடக்கம், கற்கை நெறிகளின் மதிப்பீடு, சான்றிதழ்களை வழங்குதவதற்குத் தேவையான சிபார்சுகள், அங்கீகாரம் முதலியவற்றுக்காக எதுவித எழுத்துமூலச் சான்றுகளும் கோவை செய்யப்பட்டிருக்கவில்லை.

8.1.12 இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஹிரா மன்றத்தின் ஒத்துழைப்பின் அடிப்படையில் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது என்பதனை அறிமுகப்படுத்தி கல்லூரியின் முகாமைத்துவத்தின் மூலம் அரசாங்க இலட்சினையையும் பயன்படுத்தி கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு அழைக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்த பத்திரிகை அறிவித்தல் ஒரு அரசாங்க நிறுவனமாக போலியான தோற்றத்தினைக் கட்டியெழுப்பதற்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி நடவடிக்கை எடுத்திருந்தது. (பின்னிணைப்பு - 70)

8.1.13 அரசாங்க பல்கலைக்கழகமான கிழக்கு பல்கலைக்கழகம் 1981 இலிருந்து 1988 வரை மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியாக செயற்பட்டு வந்ததனால் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் மற்றுமொரு நிறுவனம் செயற்படுவதன் மூலம் கிழக்கு பல்கலைக்கழகத்துடனான தொடர்புகள் சம்பந்தமாக சட்டரீதியான பிணைப்பு ஏற்படலாம் என 2014 யூன் 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தரினால் தொழில்சார் பயிற்சி அமைச்சிற்குத்

தெரியப்படுத்தியிருந்தும் அதற்காக எதுவித கவனமும் செலுத்தப்படாது தொழில்சார் பயிற்சி அமைச்சு அப்பல்கலைக்கழகக் கல்லூரிக்கு மேற்கூறிய பெயரில் தோற்றம் பெற்று NVQ சான்றிதழை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

8.1.14 மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினைச் செய்து கொள்வதற்கு முன்னர் தொழில்சார் பயிற்சி அமைச்சு எதுவித தனியார் கம்பனியுடனும் அவ்வாறான புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பகுதியளவு அரச நிறுவனமான சிறீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையுடன் 2013 மே 09 ஆந் திகதி ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இளைஞர் விவகார அமைச்சிற்காக அமைச்சின் செயலாளர் கையொப்பம் இட்டிருந்த போதிலும் மேற்கூறிய மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இளைஞர் விவகார அமைச்சிற்காக அந்த அமைச்சர் கையொப்பமிட்டிருந்தார்.

## 8.2 இலங்கை மகாவெலி அதிகாரசபையினால் மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனிக்கு காணியை விடுவித்தல்

---

8.2.1 டீ.எல்/1/1 ஆம் இலக்க 2013 மே 18 ஆந் திகதிய மகவெலி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் (பின்னிணைப்பு 71) மகவெலி காணியை விடுவிப்பதற்கு முன்னர் வலய ரீதியான பௌதீக திட்டமிடுதல் குழுவின் மற்றும் பணிப்பாளர் (காணிப் பயன்பாடு) அவர்களின் சிபார்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கு 35 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு முன்னர் மதிப்பீட்டு நடைமுறையில் மேற்கூறிய சிபார்சு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 நவம்பர் 02 ஆந் திகதி பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி) அவர்களால் மேற்கூறிய காணியை குத்தகை தாரருக்கு வழங்கும் குத்தகை உறுதிப்பத்திரத்தை வழங்கும் மேலதிக நடவடிக்கைகளுக்கான சிபார்சினை வழங்குவதற்கான வேண்டுகோளுக்கு (பின்னிணைப்பு - 72) பதிலாக பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள்) அவர்களால் சிபார்சு வழங்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 73)

8.2.2 1947 இன் 08 ஆம் இலக்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் 199(3) ஆம் பிரிவின் பிரகாரம் (பின்னிணைப்பு - 74) பின்னர் நீண்டகால குத்தகைக்கு வழங்கும் குறிக்கோளில் எச்சந்தர்ப்பத்திலும் வருடாந்த குத்தகையின் அடிப்படையில் அரசாங்க காணிகளை விடுவிக்கலாகாது என வலியுறுத்தப்பட்டிருந்த அதேவேளை குத்தகைக்கு வழங்கியவரின் முன் அனுமதியின்றி வருடாந்த உத்தரவுப்பத்திரத்தின் அடிப்படையில் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடங்களை நிர்மாணிக்கலாகாது என எல்.சீ75 ஆம் இலக்க வருடாந்த உத்தரவுப்

பத்திர படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 15) எனினும், வருடாந்த உத்தரவுப் பத்திரத்தில் ‘‘கட்டிடத்தை நிர்மாணிக்கும் அனுமதி உள்ளது’’ எனக் குறிப்பிட்டு வருடாந்த உத்தரவுப் பத்திரத்துடன் காணியில் நீண்டகால பாரிய அளவான செயற்திட்டத்திற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மகாவெலி அதிகாரசபையினால் அனுமதி வழங்கப்பட்டு பின்னர் வருடாந்த குத்தகை நீண்டகால குத்தகைக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் தெரிந்துகொண்டு காணிகள் அதிகாரச்சட்டத்தின் மேற்கூறிய பிரிவு மீறப்பட்டிருந்தது.

8.2.3 காணிகள் அதிகாரச்சட்டத்தின் 199(4) ஆம் பிரிவின் பிரகாரம் (பின்னிணைப்பு - 74) அமைச்சரினால் விசேடமாக ஆலோசனை வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் காணிகள் அதிகாரச்சட்டத்தினை அமுல்படுத்தும் வகையில் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதி இலக்கம் 21(2) இன் பிரகாரம் (பின்னிணைப்பு - 75) ‘‘உத்தேச குத்தகைக்கு வழங்குதல் சம்பந்தமாக பொது மக்களின் எதிர்ப்பு காணப்படுமாகயிருந்தால் சமர்ப்பிக்கும் வகையில்’’ வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், அப்பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாது காணியை ஒப்படைப்பதற்காக அமைச்சருக்கு அதிகாரச்சட்டத்திலுள்ள விதிவிலக்கு அதிகாரத்தினைப் பயன்படுத்தி அதனை வர்த்தமானியில் பிரசுரிக்காமைக்கு தீர்மானம் எடுப்பதற்கான அடிப்படைக் காரணத்தை முன்வைக்காது வர்த்தமானி அறிவித்தலை வழங்காமை பொருத்தமானது என அதிகாரசபையின் மூலம் அமைச்சருக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 20)

8.2.4 இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தால் 2013 யூலை 04 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள 270016 ஆம் இலக்க நில அளவைப் படத்தின் பிரகாரம் (பின்னிணைப்பு 76) மேற்கூறிய குத்தகைக் காணியில் தொகுதி இலக்கம் 800, 804 மற்றும் 808 என்ற மூன்று காணித்துண்டுகள் வயல் காணிகளாக அடையாளம் காணப்பட்டிருந்ததுடன், வரைபடத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளுக்கு மத்தியில் இலக்கம் 802 என பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கால்வாய் வரையும் காணப்பட்டது. உத்தரவு அற்ற விவசாயிகளினால் நெற் பயிர்ச்செய்கைக்காக இக்காணி பயன்படுத்தப்பட்டிருந்தும் வரைபடத்தில் கால்வாயினூடாக வயல் காணிகளுக்காக இலகுவாக நீரைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தும் டீஎல் 1/1 ஆம் இலக்க 2013 மே 18 ஆந் திகதிய மகவெலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் பௌதீக திட்டமிடல் குழுவின் மற்றும் பணிப்பாளர் (காணிப் பயன்பாடு மற்றும் திட்டங்கள்) அவர்களின் சிபார்சினைப் பெற்றுக்கொள்ளாது வயல் காணியை வணிக நடவடிக்கைகளுக்காக ஹிரா மன்றத்திற்கு வழங்குவதற்கான திட்டத்துடன் நில அளவைப் படத்தில் ‘‘வயல் காணிக்கு’’ பதிலாக ‘‘ஏனையவை’’ என நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம்

மாற்றம் செய்வதற்கு அசேலபுர மகவெலி பிரிவு முகாமையாளர் மற்றும் வெலிகந்த வதிவிட வியாபார முகாமையாளர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

8.2.5 மேற்கூறிய அவதானிப்பு இலக்கம் 04 இன் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்ற மற்றும் நிரந்தர நீர்ப்பாசன முறைமையை உருவாக்கும் இயலுமையுள்ள காணித்துண்டுகளை வணிக நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மகவெலி அதிகாரசபையினால் அவ்வாறான எதுவித விசாரணையும் செய்யப்படாது வணிகரீதியான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து மேற்கூறிய காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

8.2.6 குத்தகை அடிப்படையில் மகவெலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மண் நிரப்புதல் இடம்பெற்றிருந்ததுடன் உரிய மண் நிரப்புதலுக்காக பின்வரும் அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) மண் நிரப்புவதற்காக அருகாமையிலுள்ள சரணாலயத்தில் மண் வெட்டப்பட்டிருந்த போதிலும், 2009 இன் 66 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடமிருந்து உத்தரவுப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (பின்னிணைப்பு - 77)

(ii) சரணாலய பிரதேசத்தில் மண் வெட்டுவதற்காக வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மண்ணை எடுத்துச் செல்வதற்காக வாகரை பிரதேச செயலகத்திடமிருந்து உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வயல் காணிகளையும் தாழ் நிலங்களையும் நிரப்புதல் சம்பந்தமாக கமநல சேவைகள் திணைக்களத்தின் எழுத்துமூல அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

8.2.7 செயற்திட்டத்திற்கான கட்டிடங்களை நிர்மாணித்தல் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டம் மற்றும் நிர்மாண திட்டங்கள் கோரளைப் பற்று வடக்கு - வாகரை பிரதேச சபைக்குச் சமர்ப்பித்து முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் உரிய முறைப்படி இடம்பெற்றிருக்கவில்லை.

எவ்வாறாயினும், மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியால் கோரளைப்பற்று வடக்கு - வாகரை பிரதேச சபையின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் கையொப்பமிடப்பட்ட கட்டிட திட்டவரைபடத்தின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் விடயங்களின் காரணமாக மேலே குறிப்பிடப்பட்ட கையொப்பங்களுடனான கட்டிட திட்டமானது முறையான அங்கீகாரம் என உறுதிப்படுத்தப்படவில்லை. (பின்னிணைப்பு 78)

(i) மேற்கூறிய கையொப்பங்களை இடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கடிதம் மற்றும் பரிசோதனை அறிக்கைகளுடனான கோவைகள் பிரதேச சபையினால் பேணப்பட்டிருக்காமை.

(ii) மேற்கூறிய விடயத்தை புலனாய்வு செய்வதற்காக ஒரு குழு மற்றும் விடய வல்லுனர்களைக் கொண்ட பரிசீலனைச் சபை நியமிக்கப்பட்டிருக்காமை.

(iii) அங்கீகாரத்தினை வழங்குவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை.

(iv) நிலையப் பரிசோதனை அறிக்கை, வீதி வரைபடம், சான்றிதழ், நிர்மாணத்திற்கான உப திட்டங்கள் என்பதனைப் போல ஏனைய உரிய அதிகாரிகளிடமிருந்து விடுவிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காமை.

8.2.8 குத்தகைதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிக்குரிய நில அளவைப் படத்தில் எல்லைக்கு வெளியேயுள்ள குத்தகைதாரருக்கு சட்டரீதியாக தகமையற்ற அரசாங்கத்தின் காணிகளில் இலக்கம் பீ12-19 வரையான கட்டிடங்கள் மற்றும் பீ 24 இலிருந்து பீ 34 வரையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு பிரதான கட்டிட திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், காணியின் நில அளவைப் படம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது கட்டிடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை மற்றும் சட்டரீதியாக உரிமையற்ற காணியிலும் கூட கட்டிடங்களை நிர்மாணிக்கக் கூடிய வகையில் அத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் அதுபற்றிக் கவனம் செலுத்தாது வாகரை பிரதேச சபை செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அக்கட்டிட திட்ட வரைபடத்தில் தமது கையொப்பங்கள் இடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய முறையற்ற அங்கீகாரத்துடனான திட்டவரைபடம் மகவெலி அதிகாரசபையின் பிரிவு முகாமையாளரால் தனது கையொப்பம் இடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திலுள்ள உள்ளபடியான நிர்மாணங்கள் மேற்கூறிய திட்ட வரைபடத்திலுள்ள நிர்மாணங்களுடன் இணங்கியிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு - 79)

8.2.9 குத்தகைதாரரினால் பயன்படுத்தக்கூடிய காணிகளின் அளவு குத்தகை உடன்படிக்கையிலும் நிலஅளவை வரைபடத்திலுமுள்ள காணிகளின் அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், குத்தகைதாரரினால் எதுவித சட்டரீதியான உரிமையும் இன்றி குத்தகை ஆதனங்களுக்கு மேலதிகமாக குத்தகை ஆதனத்தின் எல்லை வரம்புகளுக்கு அப்பால் மேலும் 09 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணியில் நிரந்தரக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சட்டத்துக்கு முரணாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், குத்தகை காணிகளுக்கு மத்தியில் கால்வாயும் அதிக சக்தியுள்ள மின்சார வயர்களுக்குமாக அதிகாரசபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சரணாலயத்தில் மகவெலி அதிகாரசபையின் எதுவித அங்கீகாரமுமின்றி நிரந்தர கட்டிடங்களையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் மகவெலி அதிகாரசபையினால் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

8.2.10 வணிக நோக்கத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது / மற்றும் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒரு செயற்திட்டத்திற்காக மகவெலி காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் உத்தேச செயற்திட்டத்தின் திட்டங்களுக்கமைய ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்கள் சம்பந்தமாக சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அறிக்கையினை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், காணிகளுக்கு குத்தகைக்கு வழங்கியமை சம்பந்தமாக சுற்றாடல் அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை.

8.2.11 குத்தகைதாரருக்கு மேற்கூறிய மகவெலி காணியை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான நீண்டகால குத்தகை உறுதிப்பத்திரத்திலுள்ள நிபந்தனை இலக்கம் 8 மற்றும் வருடாந்த உத்தரவுப் பத்திரத்திலுள்ள நிபந்தனை இலக்கம் 9 இன் பிரகாரம் காணியின் எல்லையை காட்டுகின்ற காணிகளின் எல்லை அடையாளங்களை மாற்றம் செய்யாது பேணப்பட வேண்டிய போதிலும், குத்தகை காணிக்குள் நில அளவையாளர் திணைக்களத்தினால் அடையாளமிடப்பட்ட எல்லை வரம்புகளை இனங்காணக்கூடிய வகையில் பேணப்பட்டிருக்கவில்லை. எல்லைகளைக் சுட்டிக்காட்டுகின்ற எல்லைக் குறியீடுகளை இனங்காண முடியாத சந்தர்ப்பத்தின் போது நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் குத்தகைதாரரின் செலவில் மீண்டும் நிலஅளவை செய்து எல்லைக் குறியீடுகளை நிறுவுவதற்கு ஆலோசனை வழங்க வேண்டிய போதிலும், வதிவிட வியாபார முகாமையாளர் (மகாவெலி பீ வலயம்) அவர்களினால் 2019 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குத்தகைதாரரின் பங்களிப்பின்றி மீண்டும் நிலஅளவை செய்வதற்காக மட்டக்களப்பு நில அளவை அத்தியட்சகர் அலுவலகத்திடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தது.

8.2.12 மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனிக்கு மகவெலி காணியை நீண்டகால குத்தகையின் அடிப்படையில் ஒப்படைப்பதற்காக 2018 பெப்ரவரி 01 ஆந் திகதி குத்தகை உறுதிப்பத்திரம் கையெழுத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையை அமுல்படுத்தும் திகதி 2013 யூலை 12 ஆந் திகதி வரை பிற்போட்டிருந்தது. மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியை சட்டரீதியான அலகாக கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட திகதி 2015 யூலை 14 ஆந் திகதியாக இருந்ததன் காணரமாக உடன்படிக்கையை அமுல்படுத்துகின்ற திகதியில் உடன்படிக்கை செய்யப்பட்ட பெயரில் ஒரு கம்பனி உருவாகியிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கூறிய குத்தகை உடன்படிக்கையினைச் செய்து கொண்ட திகதியிலேயே உடன்படிக்கைச் சட்டத்திற்குள் அமுல்படுத்த முடியாதிருந்தது (வெற்று உடன்படிக்கை) என்பது அவதானிக்கப்பட்டது.

## 8.3 மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியை இலங்கை முதலீட்டுச் சபைச் செயற்திட்டமாக உடன்படிக்கை செய்துகொள்ளல்

---

8.3.1 ஒரு முதலீட்டுச் சபைச் செயற்திட்டமாக மேற்கூறிய செயற்திட்டத்தை பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தொடக்க விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதித் திட்டத்தில் அமெரிக்க டொலர் 40.2 மில்லியன் வெளிநாட்டு முதலீடு செய்யப்படுவதாகக் காட்டப்பட்டிருந்தும் இரண்டாவது விண்ணப்ப படிவத்தில் அது அமெரிக்க டொலர் 3.2 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. முதலாவது விண்ணப்ப படிவத்தில் உயர்ந்த பெறுமதியுடனான வெளிநாட்டு முதலீடு இரண்டாவது விண்ணப்ப படிவத்தில் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக கவனம் செலுத்தப்படாது முதலீட்டுச் சபையினால் செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**கணக்காய்வுப் பந்திக்காக முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டுள்ள பதில்**

---

முதலாவது விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்க டொலர் 40.2 மில்லியன் முழுமையாக வெளிநாட்டு முதலீடாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் வெளிநாட்டு முதலீட்டாளர் பற்றி குறிப்பிடப்படவில்லை. மேலும் எங்களின் முதலீட்டு விண்ணப்ப படிவத்தில் இலக்கம் 05 இன் கீழ் வெளிநாட்டு முதலீடு சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறே அமெரிக்க டொலர் 40.2 மில்லியன் ஆன பாரிய முதலீட்டினை வழங்குகின்ற முதலீட்டாளர் சம்பந்தமாக முறையான விளக்கமளித்தல் இல்லாததனால் அதனை கவனத்திற் கொள்ளாது அங்கீகாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதனூடாக அத்தீர்மானம் முதலீட்டாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (பின்னிணைப்பு - 80)

8.3.2 மேற்கூறிய செயற்திட்டத்தை தோற்றுவிப்பதற்கு உத்தேசித்த காணி செயற்திட்டத்தின் பெயரில் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் (ஆகக் குறைந்தது 30 ஆண்டுகள் காலத்திற்காக) பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென முதலீட்டுச் சபையின் உதவிப் பணிப்பாளர் - முதலீட்டு மதிப்பீடு, அவர்களினால் நிறைவேற்று பணிப்பாளர் முதலீட்டு மதிப்பீடு மேம்பாடு, அவர்களுக்கு சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அச்சிபார்சினை கவனத்தில் கொள்ளாது காணியின் உரிமை சம்பந்தமாக எதுவித அங்கீகாரமும் இன்றி 2016 சனவரி 12 ஆந் திகதி செயற்திட்டத்திற்காக முதலீட்டுச் சபை அங்கீகாரத்தினை வழங்கி பின்னர் 2016 மே 19 ஆந் திகதி முதலீட்டுச் சபையும் பெட்டிகலோ கெம்பஸ் லிமிட்டட் நிறுவனமும் உடன்படிக்கையினை மேற்கொண்டிருந்தது.

8.3.3 செயற்திட்டம் உயர்கல்வி அமைச்சின் நோக்கெல்லைக்கு உரியதல்ல என முதலீட்டுச் சபைக்குத் தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் மேற்கூறிய செயற்திட்டம் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத நிலைமையில் செயற்திட்டத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் மற்றும் அதன் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைந்து கொள்கின்ற முறைமையும் விளக்கமளிக்கப்படாது முதலீட்டுச் சபையினால் செயற்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. (செயற்திட்டத்தின் பெயரில் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் மகவெலி காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது 2018 பெப்ரவரி 01 ஆந் திகதியாகும்).

8.3.4 முதலீட்டுச் சபை செயற்திட்டமாகப் பதிவு செய்வதற்கு கருதுகின்ற நிறுவனத்தினால் தனது விண்ணப்ப பத்திரத்துடன் உத்தேச செயற்திட்ட காணியில் சட்டரீதியான உரிமையுடனான காணியின் சட்டரீதியான நில அளவைத் திட்டம் பிரதேச சபையின் அங்கீகாரத்துடனான உத்தேச கட்டிட திட்ட வரைபடம், வீதி வரைபட சான்றிதழ் மற்றும் காணி உரிமையாளரின் இணக்கப்பாட்டுடனான கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய செயற்திட்டத்திற்கான விண்ணப்ப படிவத்துடன் அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் சாத்திய வள மதிப்பீட்டிற்கு அத்தியாவசதியமான மேற்கூறிய ஆவணங்கள் இன்றி முதலீட்டுச் சபையினால் செயற்திட்டம் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

8.3.5 இலங்கை முதலீட்டுச் சபையினால் 2016 மார்ச் 03 மற்றும் 2016 மார்ச் 30 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் உத்தேச செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்திற்குப் பதிலாக காணியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளதனால் மற்றும் செயற்திட்டத்தின் நிர்மாணங்களில் சரி அரைவாசிக்கு மேல் முடிவுறுத்தப்பட்டுள்ளதனால் சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் அர்த்தமற்ற செயற்பாடு என சுற்றாடல் அதிகாரசபையினால் 2016 யூலை 08 ஆந் திகதி முதலீட்டுச் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 81)

எவ்வாறாயினும், சுற்றாடல் உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதும் சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து பதில் கிடைப்பதற்கு முன்னரும் செயற்திட்டத்தின் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக எதுவித அச்சமுமின்றி முதலீட்டுச் சபையினால் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

8.3.6 செயற்திட்டமானது முழுமையாக பதிய செயற்திட்டமாக இருக்க வேண்டும் எனவும் மற்றும் காணப்படுகின்ற வியாபார நிறுவனத்தை மீளமைப்புச் செய்தல் அல்லது அவ்வாறு காணப்படுகின்ற நிறுவனத்தின் சொத்துக்களை பரிமாற்றம் செய்த புதிய செயற்திட்டமாக இல்லாதிருக்க வேண்டும் எனவும் முதலீட்டுச் சபை மற்றும் பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி கையொப்பமிட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தும் பின்வரும் விடயங்களின் காரணமாக இச்செயற்திட்டம் புதிய செயற்திட்டம் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாகக கவனம் செலுத்தப்படாது முதலீட்டுச் சபையினால் செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(i) முதலீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பின்னிணைப்பு 28 இல் தரப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜ் தனியார் கம்பனி என்ற பெயரிலான உத்தியோக முத்திரை பொறிக்கப்பட்டிருந்ததன் மூலம் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்துள்ள கம்பனி அப்போது பதிவுசெய்து கொள்ளப்பட்ட ஒரு கம்பனி என்பது வெளிப்படையாகும்.

(ii) அவதானிப்பு இலக்கம் 05 இலுள்ள சுற்றாடல் அதிகாரசபையினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு இணங்க 2015 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் சுற்றாடல் அதிகார சபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அது ஒரு புதிய செயற்திட்டம் இல்லாமை.

(iii) ஒரு முதலீட்டுச் சபைச் செயற்திட்டமாக பதிவு செய்வதற்குத் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவத்துடன் ஹிரா மன்றத்தினால் தொழில்சார் பயிற்சி அமைச்சுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் விண்ணப்பம் மற்றும் மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகிய ஆவணங்கள் முதலீட்டுச் சபைக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் மேற்கூறிய செயற்திட்டம் மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி என்ற பெயரிலான தனியார் முயற்சியின் விஸ்தரிப்பாக கருதுதல்..

(iv) பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜ் தனியார் கம்பனியின் தலைவர் ஹிஸ்புல்லா அவர்களினால் 2015 திசெம்பர் 04 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம் முதலீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்தில் செயற்திட்டத்திற்காக அமெரிக்க டொலர் 50 மில்லியன் முதலீடு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததன் மூலம் முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்திற்கு முன்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகும்.

(v) உத்தேச செயற்திட்டத்தை முதலீட்டுச சபைச் செயற்திட்டமாக பதிவு செய்வதற்காக ஹிரா மன்றத்தின் தலைவர் ஹிஸ்புல்லா அவர்களினால் இரண்டாவது தடவையாக விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்த திகதியேலேயே விண்ணப்பப் பத்திரத்திலுள்ள தகவல்கள் சம்பந்தமாக எதுவித மதிப்பீடுமின்றி செயற்திட்டத்திற்குரிய வியாபார நிறுவனத்தை உருவாக்குவதற்காக முதலீட்டுச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை கம்பனியின் வரைவு அமைப்பு அகவிதியின் ஒரு பிரதி சபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த தெரியப்படுத்துதல் கடிதத்தின் திகதியான 2015 யூலை 17 ஆந் திகதியளவில் அதாவது யூலை 14 ஆந் திகதி செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்த பெட்டிகலோ கெம்பஸ் கொலேஜ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனம் கம்பனிகள் பதிவாளரினால் ஒரு தனியார் கம்பனியாக உருவாக்கப்பட்டிருந்தது.

8.3.7 மேலே இலக்கம் 7.3.1 இலிருந்து இலக்கம் 7.3.6 வரையான அவதானிப்புக்களின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையின் சட்ட விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளும் இணக்கமற்ற வகையில் அத்தியாவசதியமாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த விடுவிப்புக்கள் இன்றி ஏற்கனவே உருவாக்கப்பட்ட மற்றும் அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட ஒரு செயற்திட்டத்தை ஒரு செயற்திட்டமாகக் கருதி முதலீட்டுச் சபையில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் பெட்டிகலோ கெம்பஸ் கம்பனி இறக்குமதி செய்த 143 சந்தர்ப்பங்களில் பொருட்களின் மீது ரூபா 48.51 மில்லியன் மொத்தப் பெறுமதியான வரி விடுதலையினை வழங்குவதற்கு (பின்னிணைப்பு - 82) முதலீட்டுச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

8.3.8 பதிவு செய்வதற்காக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது விண்ணப்ப பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டத்தின் மொத்த முதலீடு அமெரிக்க டொலர் 4.75 மில்லியனாக இருந்த போதிலும் செயற்திட்ட கம்பனியால் செயற்திட்டத்தில் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை டொலர் 24.64 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. முதலீட்டுச் சபையின் வழிகாட்டியின் பிரகாரம் செயற்திட்டம் முழுமையாக சபையின்

மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், முதலீட்டுப் பணம் செயற்திட்டத்திற்கு கிடைத்த முறைமை தொடர்பாக சபையினால் எதுவித புலனாய்வும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**கணக்காய்வுப் பந்திக்காக முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பதில்**

---

அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள முதலீட்டின் பெறுமதியினை விட அதிக பணம் ஏதாவது செயற்திட்டத்தில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர் ஆயத்தப்படுபவராகயிருந்தால் சபை அதனை செயற்திட்டத்தின் சிறந்த பண்பாகக் கருதிக் கொள்வதுடன் ஒட்டுமொத்த முதலீட்டுப் பணம் சம்பந்தமாக சபை தேடிப்பார்ப்பதானது வணிக நடவடிக்கைகள் ஆரம்பித்ததன் பின்னராகும். (பின்னிணைப்பு - 80)

8.3.9 செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குதலை கருத்திற்கொண்டு முகாமைத்துவப் பணிப்பாளர் ஹிரா மன்றத்திற்கு 2016 சனவரி 12 ஆந் திகதி முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனை தொகுப்பின் 10 ஆவது பிரிவில் தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கு உத்தேசித்த மற்றும் வரி நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களின் அளவு மற்றும் வகைகள் சம்பந்தமான 02 பட்டோலைகள் உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் சபைக்கு வழங்கப்பட வேண்டுமென தெரியப்படுத்தியிருந்தும் அவ்வாறான கொள்வனவுகள் / இறக்குமதிகள் மற்றும் அவற்றின் அளவு சம்பந்தமாக முறையான ஆவணங்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.4 இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கினூடாக பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு பெறப்பட்ட பணம் அனுப்புதல்களின் பெறுவனவு

---

8.4.1 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மற்றும் 1986 இன் 02 ஆம் இலக்க நாணயமாற்று கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு நாணயமாற்று கட்டுப்பாட்டு சட்ட விதிகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தங்களுக்காக மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் இலக்கம் 01/2007 இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் (பின்னிணைப்பு - 82) அனைத்து வெளிநாட்டு பணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல், சம்பந்தமான விபரம் வழிகாட்டியின் பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ள படிவம் இலக்கம் I மற்றும் II இன் மூலம் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு 04 வங்கிக் கணக்குகளின் மூலம்

ரூபா 3,669,977,451.55 மொத்த பெறுமதிக்குரிய வெளிநாட்டு நாணயங்கள் கிடைத்தல் 21 சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தியிருக்கவில்லை. (பட்டோலை இலக்கம் 03)

**கணக்காய்வுப் பந்திக்காக இலங்கை வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பதில்**

---

ஏதாவது வணிக வங்கியில் பணத்தை வைப்புச் செய்யும் போது அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் மற்றும் நபர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலானது அந்த வைப்புக்களை பொறுப்பேற்கும் வங்கியின் பொறுப்பாக இருப்பதுடன் அது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையாகும். அதற்கிணங்க மேலே காட்டப்பட்ட சர்வதேச வங்கியினூடாக வரும் பணம் அனுப்புதல்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் சட்டரீதியான மூலகங்களிலிருந்து பெற்ற பணமாகக் கருதப்படலாம். அதற்கிணங்க நிதியங்களின் மூலகங்கள் தொடர்பாக தேடிப்பார்க்கும் தேவைப்பாடு இலங்கை வங்கிக்கு உருவாகியிருக்கவில்லை.

வருகின்ற பணம் அனுப்புதல்களினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணமானது பணம் அனுப்புதல்களில் குறிப்பிட்ட முறைமையில் உரிய நலனாளியின் கணக்கிற்கு இலங்கை வங்கியினால் செலவு வைக்கப்பட்டது. அவ்வாறே அப்பணத்தை ஈடுபடுத்திய குறிக்கோள் தொடர்பாக இலங்கை வங்கியினால் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போது வருகின்ற பணம் அனுப்புதல் பணமானது பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கை ஆரம்பிக்கும் சம்பந்தப்பட்ட வங்கி கிளையின் முகாமையாளரால் சரியாக கணக்கை ஆரம்பிக்கும் போது நோக்கம் இனங்காணப்பட்ட முறைமையில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதனாது பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக எனவும் அதற்கிணங்க பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்பட்டு வருவதனாலும் அப்பணம் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு - 84)

8.4.2 2006 இன் 06 ஆம் இலக்க பண கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கியினால் 2016 சனவரி 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1951/13 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்ட விதிக்கோவையின் 59(ஆ) பிரிவின் பிரகாரம் (பின்னிணைப்பு - 85) வணிகத் தொடர்புகளுக்காக உள்வருவதற்கு விண்ணப்பித்துள்ள நபர் அரசியல் பின்னிணியுடனான ஒரு நபராக இருக்கும் சந்தர்ப்பத்தின் போது உரிய வணிக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் நிதி நிறுவனத்தினால் அதன் நிருவாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா மற்றும் ஹிராஸ் ஹிஸ்புல்லா ஆகிய அரசியல் பின்னிணியுடனான நபர்களை உள்ளடக்கிய நிறுவனத்தினால் வங்கி கணக்கினூடாக

(மேலே பின்னணி தகவல் இலக்கம் 01 இல் குறிப்பிட்ட 14 வங்கி கணக்குகளுக்காக) வணிகத் தொடர்புகளை மேற்கொள்ளும் போது மேற்கூறிய பிரிவின் பிரகாரம் இலங்கை வங்கி அதன் நிருவாக சபையிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

அவதானிப்புக்களுக்கு இணங்க மேற்கூறிய 14 வங்கி கணக்குகளுக்காக இலங்கை வங்கி நிருவாக சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனை இலங்கை வங்கி ஏற்றுக் கொண்டுள்ளதுடன் 04 வங்கிக் கணக்குகளுக்காக மாத்திரம் மேற்கூறிய முகாமைத்துவ அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் ஏனைய 10 கணக்குகளுக்காக உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என இலங்கை வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு - 84)

8.4.3 மேற்கூறிய சட்ட விதிக் கோவையின் 59(இ) பிரிவின் பிரகாரம் அரசியல் பின்னணியுடனான நபரினால் பேணப்படுகின்ற கணக்குகளுக்கு கிடைக்கின்ற நிதிகள் சம்பந்தமான நிதி மூலங்கள் மற்றும் நலனாளியின் உரிமையாண்மையானது பொருத்தமான முறைமையின் மூலம் உரிய நிதி நிறுவனத்தினால் உறுதிப்படுத்தியிருக்க வேண்டிய போதிலும், அரசியல் பின்னிணியுடனான ஹிஸ்புல்லா குடும்பத்தின் முகாமைத்துவத்துடனான 04 வியாபார நிறுவனங்களின் வங்கி கணக்குகளுக்கு 30 சந்தர்ப்பங்களின் போது கிடைத்திருந்த ரூபா 4,123,895,832 பெறுமதியைக் கொண்ட வெளிநாட்டு பணம் அனுப்புதல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி மூலம், அதன் குறிக்கோள் மற்றும் சட்டரீதியான தன்மை தொடர்பாக பொருத்தமான முறைமையின் மூலம் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த அவதானிப்பு சம்பந்தமாக இலங்கை வங்கி முறையான விளக்கமளித்தலை கணக்காய்விற்கு வழங்கியிருக்கவில்லை.

8.4.4 பணக்கொடுக்கல் வாங்கலை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான மத்திய வங்கி சட்ட விதிக் கோவையின் 59(ஈ) பிரிவில் குறிப்பிட்ட அரசியல் பின்னணியுடனான நபர்களுடன் காணப்படுகின்ற வியாபாரத் தொடர்புகள் சம்பந்தமாக தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்துதல் செய்யப்படல் வேண்டும் என்ற பிரிவிற்கு இணங்கியிருப்பதற்காக இலங்கை வங்கியின் 2018/25 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் மூலம் (பின்னிணைப்பு - 86) அரசியல் பின்னிணியுடனான நபரின் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முக்கியமான தகவல்கள் 06 மாதத்திற்கு ஒரு தடவை புலனாய்வு செய்து வாடிக்கையாளரை விசாரித்து இணக்காட்டினைப்பெற்று பதிவுசெய்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும், அரசியல் பின்னிணியுடனான ஹிஸ்புல்லா குடும்பம் சம்பந்தப்பட்ட மேற்கூறிய 14 வங்கிக் கணக்குகளுக்காக அவ்வாறு

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய அவதானிப்புக்களுக்குப் பொருத்தமான பதில் இலங்கை வங்கியினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

8.4.5 மேற்கூறிய மத்திய வங்கி சட்ட விதிக்கோவையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் வாடிக்கையாளரின் நிதிக் கொடுக்கல் வாங்கலானது அவரின் உழைப்பு மூலத்துடன் இணங்குகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான அடிப்படையில் வியாபாரத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதுடன் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பார்க்கையில் உருவாகின்ற சட்ட ரீதியான குறிக்கோளற்ற அனைத்து சிக்கலான மற்றும் வழமைக்கு மாற்றமான கொடுக்கல் வாங்கல்களின் பின்னணி மற்றும் குறிக்கோளைப் பரீட்சித்து தேவையான சந்தர்ப்பத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அறிக்கையிட வேண்டியதுடன் சட்டவிதிகளுக்கு இணக்கமற்ற 39 நிதி கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரிவின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்காக நிறுவனத்தின் இணக்கப்பாட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியின் 78495137 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கணக்கிற்கு 07 சந்தர்ப்பங்களின் போது நியாயமற்ற வகையில் ஒரு தடவைக்கு டொலர் 2.8 மில்லியனுக்கு (ரூபா 4.1 பில்லியன்) மேற்பட்ட பணம் கிடைத்திருந்தும் சிக்கலுடையதான அந்த நியாயமற்ற கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக மேற்கூறிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக இலங்கை வங்கி கணக்காய்விற்கு முறையான விளக்கமளித்தல்களை வழங்கியிருக்கவில்லை.

8.4.6 நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்திற்கான மத்திய வங்கி சட்டவிதிக் கோவையின் 47(இ) பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு கணக்கிற்கு மூன்றாந் தரப்பு வாடிக்கையாளரினால் ஒரு தடவைக்கு 200,000 இற்கு மிகைத்த பணத்தை வைப்புச் செய்தல் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது பணத்தை வைப்புச் செய்பவரின் பெயர், விலாசம், அடையாள இலக்கம், வைப்புச் செய்யும் நோக்கம் முதலிய தகவல்களை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் வங்கியினால் வைப்பு சம்பந்தமான தகவல்களை கணனி முறைமையிலுள்ள உரிய பிரிவில் உள்ளடக்குதல் வேண்டும். எனினும், பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனியின் 7895137 ஆம் இலக்க கணக்கிற்கு 11 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 59,975,000 வைப்பிற்காக வைப்பாளரின் விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய 10 வைப்புச் சந்தர்ப்பங்களின் போது அவதானிப்புக்களின் பிரகாரம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8.4.7 மத்திய வங்கி சட்ட விதிகளின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு வாடிக்கையாளரினால் ஒரே நிதி நிறுவனத்தின் இரண்டு கணக்குகளை அல்லது மேற்பட்ட கணக்குகளைத் திறக்குகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வாறான கணக்குகளை திறப்பது சம்பந்தமான விசேட காரணம் நிதி நிறுவனத்தினால் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான விசேட காரணத்தை தெரிவிக்காது மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனிக்கு இலங்கை வங்கி வெலிகந்த மற்றும் கொள்ளுபிட்டி கிளைகளில் வங்கி கணக்கினை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியின் பல்வேறு செயற்பாடுகளுக்காக அவ்வாறு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அச்செயற்பாடுகள் விசேட குறிக்கோளாக இனங்காணப்பட்டுள்ளது எனவும் இலங்கை வங்கி கணக்காய்விற்கு தெரிவித்திருந்தது.

8.4.8 மத்திய வங்கி சட்ட விதிக் கோவையின் 54(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது சமூகசேவை அமைப்பினால் நிதி நிறுவனத்தில் பேணப்பட்டு வரும் கணக்கிற்கு கிடைக்கின்ற பணம் அனுப்புதல்கள் தடை செய்யப்பட்ட அமைப்புக்களிடமிருந்து அல்லது நபர்களிடமிருந்து இல்லை என்பதனைப் பார்த்துக்கொள்வதற்காக பணம் அனுப்புதல்களின் சட்டரீதியான தன்மையைப் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிதி நிறுவனத்தினால் சமூக அமைப்பின் நிகழ்கால அனைத்து தொடர்புகளையும் மீளாய்வு செய்து ஒழுங்குபடுத்த வேண்டிய போதிலும், ஹிரா மன்றம் என்ற பெயரிலான சமூக அமைப்பின் பெயரில் இலங்கை வங்கியில் பேணப்பட்ட 1631952 ஆம் இலக்க கணக்கு சம்பந்தமாக மேற்கூறிய பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் செய்யப்பட்டிருக்கவில்லை. எதுவித ஒழுங்குபடுத்தலுமின்றி பேணப்பட்டு வந்த மேற்கூறிய கணக்கிற்கு 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 313,128,282 மொத்த பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பணம் அனுப்புதல்கள் செலவு வைக்கப்பட்டிருந்தன. (பட்டோலை இலக்கம் 04) அவதானிப்புக்களுடன் இணங்கும் வகையிலான பதில் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

8.4.9 சட்ட விதிக் கோவையின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் எதுவித நிதி நிறுவனத்தாலும் எதுவித புனைக்கப்பட்ட பொய்யான பெயரில், அல்லது மோசடியான நபரின் பெயரில் ஒரு கணக்கை திறக்கலாகாது என தெரியப்படுத்தியிருந்தும் இலங்கை வங்கி காத்தான்குடி கிளையினால் மலிக் அப்துல்லா பின் அப்துல் அசீஸ் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் வியாபாரத்தை பதிவு செய்தல் சான்றிதழ் இன்றியும் பதிவு செய்யப்படாத நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலமும் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா அவர்கள் மேற்கொண்ட வேண்டுதலுக்கு (பின்னிணைப்பு - 87) பதிலாக போலியான பெயரில் ஒரு கணக்கை ஆரம்பித்து பேணுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. பதிவு செய்தல் சான்றிதழ் இன்றி கணக்கை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை இலங்கை வங்கி கணக்காய்விற்கு வழங்கவில்லை.

8.4.10 2006 இன் 06 ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் அதிகாரச்சட்டத்திற்கான மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய பணிப்புரையின் 3 ஆம் பிரிவின் II ஆம் பந்தியில் (பின்னிணைப்பு - 88) வங்கி மற்றும் நிதிக் கம்பனிகளுக்குரியதான முதலாவது பட்டோலையின் மூலம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அதன் பட்டோலையின் 37 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சந்தேகத்திற்குரியதான கொடுக்கல் வாங்கல்கள் அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும், நியாயமற்ற வகையில் வைப்புச் செய்தல் மற்றும் மீளப் பெறுதல், பெறுமதிகளுடனான பாரியளவு வெளி பணம் அனுப்புதல்களுடன் அடையாளத்தையும் ஏனைய தகவல்களையும் இனங்காணாது மற்றும் அனுப்புபவர்களின் நோக்கங்கள் மற்றும் சட்டரீதியான தன்மையை இனங்காணாத வியாபார நிறுவனத்தின் 04 கணக்குகளுக்கு 25 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்களின் பெறுமதி சம்பந்தமாக மேற்கூறிய பட்டோலையின் மூலம் மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய வங்கி சட்ட விதிக் கோவையின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் சந்தேகத்தை நீருபிக்காமையின் அடிப்படையில் உரிய தகவல்கள் அறிக்கையிடப்படவில்லை என இலங்கை வங்கி கணக்காய்வுக்குத் தெரிவித்திருந்தது.

## 8.5 மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு பட்டம் வழங்கும் இயலுமையினைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக உயர்கல்வி அமைச்சுடனான கொடுக்கல் வாங்கல்கள்

---

அரசாங்கத்தின் 1824/21 மற்றும் 1891/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 01/2013 ஆம் இலக்க SA பணிப்புரையை அடிப்படையாகக் கொண்டு உயர்கல்வி அமைச்சினால் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவன ஒப்புதல்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆலோசனைத் தொகுப்பில் (பின்னிணைப்பு - 89) குறிப்பிட்ட சிபார்சுகளுக்கு முரணாக மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கு பட்டம் வழங்கும் இயலுமையினை வழங்குதல் சம்பந்தமாக பின்வரும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

8.5.1 மேற்கூறிய ஆலோசனைத் தொகுப்புக்களுக்கு இணங்க விண்ணப்ப படிவம் மற்றும் உரிய ஆவணங்களுடன் ரூபா 200,000 மீளச் செலுத்தாத கட்டணம் அமைச்சுக்கு செலுத்த வேண்டியதுடன் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உரிய தகவல்களை உறுதிப்படுத்தக்கூடிய துணை ஆவணங்கள் போதியளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதனை பரீட்சிப்பதற்காக மீளாய்வு (Desk Review) செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான பரீட்சிப்பு செய்யப்படவில்லை.

8.5.2 அம்மீளாய்வின் பின்னர் நிறுவனரீதியான மீளாய்விற்காக விபரமான செயற்திட்ட பிரேரணைகளின் 06 பிரதிகளுடன் ரூபா 500,000 மீளச் செலுத்தாத கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். கற்கைநெறி மீளாய்வினை மேற்கொள்வதற்கு சிபார்சினை வழங்குதல் அல்லது அதற்காக கட்டணத்தை அறவீடு செய்வதற்காக நிறுவன ரீதியான மீளாய்வு வரையறைகள் மற்றும் ஒப்பீடுகள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும். மேற்கூறிய கட்டண சந்தர்ப்பங்களுக்கு இணங்க நிறுவன ரீதியான மீளாய்வு வரை அறவிடக்கூடிய கட்டணங்களின் அளவு ரூபா 700,000 ஆக இருந்த போதிலும், அதற்கு இணக்கமற்ற வகையில் உயர்கல்வி அமைச்சினால் ரூபா 1,000,000 கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

8.5.3 பின்னணி தகவல்களில் குறிப்பிடப்பட்டவாறு 2 சந்தர்ப்பங்களின் போது விடய வல்லுனர்களைக் கொண்ட ஐந்து நபர் குழுவினால் மேற்கூறிய நிறுவனத்திற்கு பட்டம் வழங்கும் இயலுமையினை வழங்குவதற்கான மதிப்பீட்டு வரையறைகளில் அதிக அளவானவை மற்றும் ஒரு உயர்கல்வி நிறுவனத்திற்கு காணப்பட வேண்டிய அத்தியவசதியமான பண்புகளுடனான வரையறைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என தமது பரிசோதனை அறிக்கையில் காட்டப்பட்டிருந்தும் அந்த நிறுவனத்திற்கு பட்டம் வழங்கும் இயலுமையை வழங்க முடியாது எனவும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் சம்பந்தமாக தெரிவித்து மீண்டும் கவனத்திற்கு எடுத்துக்கொள்வதற்காக சிபார்சு செய்யப்பட்ட குறைபாடுகளைப் பூர்த்தி செய்து மீண்டும் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து பட்டம் வழங்கும் இயலுமையினைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீண்டும் மீண்டும் குழுவினை நியமித்தும் சில விளக்கமளித்தல்களுக்காக நிறுவனங்களிடமிருந்து அறிக்கையினை கோரியும் நிறுவகரீதியான மீளாய்வுக் குழுவின் சிபார்சினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது மதிப்பீட்டு செய்வதற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் தரச்சான்றிதழ் தொடர்பான நிரந்தர குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

8.5.4 நிறுவனரீதியான மீளாய்விற்காக ஐந்து நபர்கள் கொண்ட குழு கவனத்திற்கு எடுத்துக் கொண்ட துறைகளுக்கு மத்தியில் பௌதீக வளங்கள், கல்வித் திட்டங்கள், மற்றும் தரங்களை சான்றுப்படுத்தும் நடைமுறையினைப் போல கல்வி ஆராய்ச்சி மற்றும் பதவியணியினர்களின் திறன்கள் போன்ற துறைகளின் மிகுந்த பலவீனங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றன என சிபார்சு செய்யப்பட்டிருந்தும் அத்துறைகளை மீண்டும் கவனித்துப் பார்க்காதும் மேம்படுத்துதல் செய்யப்பட்டன என்பதற்கு எதுவித சான்றுகள் இன்றியும் மேறகூறிய நிறுவனத்தின் விண்ணப்ப பத்திரம் 2017 நவம்பர் 24 ஆந் திகதி கற்கைநெறி மீளாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு - 90)

8.5.5 ஒப்புதல் அளித்தல் மற்றும் தரச் சான்றிதழ்களுக்கான நிரந்தரக் குழுவினால் கற்கைநெறி மீளாய்விற்காக நியமிக்கப்பட்ட மூன்று நபர்கள் குழுவினால் 2018 மே 08 ஆந் திகதி இடைக்கால அறிக்கை (பின்னிணைப்பு - 91) மற்றும் 2018 யூலை 04 ஆந் திகதி இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. நிறுவன ரீதியான மீளாய்வு அறிக்கையில் கற்கைநெறிகள் மற்றும் கற்பித்தல் சம்பந்தமான துறைகள் மிகவும் பலவீனமானது என்பதற்கான சிபார்சுகள் காணப்பட்டிருந்தும் மேற்கூறிய கற்கைநெறி மீளாய்வு அறிக்கையில் உத்தேச கற்கைநெறி மதிப்பீட்டு வரையறைகள் திருப்திகரமானவை என சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன.

8.5.6 பட்டப்படிப்பு கற்கைநெறிகளை நடாத்துவதற்காக பொருத்தமான தொழில்சார் நிபுணத்துவத்துடனான மனிதவளங்கள் உத்தேச நிறுவனத்திடம் இருக்கவில்லை என நிறுவன ரீதியான மீளாய்வு அறிக்கையின் சிபார்சுகளின் பின்னர் மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் கம்பனியால் சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட 45 விரிவுரையாளர்களின் தகைமைகளுடனான பெயர்ப்பட்டியல் (பின்னிணைப்பு - 92) அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கூறிய பட்டியலிலுள்ள விரிவுரையாளர்கள் உத்தேச உயர்கல்வி நிறுவனத்தில் சேவையாற்றுவதற்காக விருப்பம் தெரிவித்த கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அப்பட்டியல் வெறும் பெயர்ப்பட்டியல் மாத்திரமா என்பது கேள்விக்குறியாக இருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது பாடவிதான மதிப்பீட்டுக் குழு தனது சிபார்சினை வழங்கியிருந்தது.

8.5.7 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதியின் பின்னர் பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனிக்கும் தொழில்சார் பயிற்சி அமைச்சிற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த அதேவேளை தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனியினை பதிவு செய்தலும் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனி 2019 ஏப்ரல் வரை தொடர்ச்சியாக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டது என்பதற்கான தகவல்கள் கிடைத்துள்ளதுடன் அவ்வாறு கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்ற அதேவேளை உயர்கல்வி அமைச்சு நியமித்த குழுவின் மூலம் பட்டம் வழங்கும் இயலுமையைப் பரீட்சிப்பதற்காக பலதடவை பெட்டிகலோ கெம்பஸ் தனியார் கம்பனிக்கு வருகை தந்திருந்தார்கள். எவ்வாறாயினும், 2016 - 2019 காலத்தில் கம்பனியால் நடாத்தப்பட்ட கற்கை நெறிகளின் தன்மை, கற்கை நெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, கற்கை நெறிகளின் உள்ளடக்கமும் அதன் தரங்களும் மற்றும் அக்கற்கை நெறிகள் பட்டப்படிப்பு தரத்தில் மற்றும் சமமான தரத்தில் காணப்படுகின்றதா என்ற எதுவித பரிசீலனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2016 - 2019 காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி அமைச்சின் முறையான அங்கீகாரமின்றி

பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு கல்விகள் வழங்கப்பட்டன என்பதற்கு கணக்காய்விற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

8.5.8 மட்டக்களப்பு கெம்பஸ் பிறைவேட் லிமிட்டட்டிற்கு மகவெலி காணியை நீண்டகால குத்தகைக்கு பெற்றுக்கொள்ளலாம் என்ற ஊகத்திற்கு அதன் முகாமைத்துவத்தினால் நீண்டகால வரைவு குத்தகை உறுதிப்பத்திரத்தின் ஒரு பிரதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வரைபு குத்தகை உறுதிப்பத்திரத்தில் விடயத்திற்குப் பொறுப்பான இரண்டு இலிகிதர்களும் குத்தகை தாரரான ஹிஸ்புல்லா அவர்களும் கையொப்பமிட்டிருந்தனர். சட்டரீதியான ஒரு ஆவணமாக பூர்த்தி செய்யப்படாத கோவையிலுள்ள ஒரு கடிதம் (பின்னிணைப்பு - 93) சட்டத்திற்கு முரணாக விடயத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட நபர்கள் மற்றும் குத்தகைதாரரினால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்ட அதேவேளை அமைச்சினால் மேற்கூறிய சட்டத்திற்கு முரணான கடிதத்தை கோவையில் உள்ளடக்கி மதிப்பீட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 8.6 அரசசார்பற்ற அமைப்பு செயலகத்தில் பதிவு செய்வதற்காக ஹிரா மன்றத்தினால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தமை சம்பந்தமான அவதானிப்புக்கள்

---

8.6.1 மேற்கூறப்பட்ட பின்னணித் தகவல்களின் பிரகாரம் ஹிரா மன்றம் ஒரு அரச சார்பற்ற அமைப்பாக பதிவு செய்யப்படாதிருந்தும் பல சந்தர்ப்பங்களில் ஹிரா மன்றம் அரச சார்பற்ற அமைப்பாகக் காட்டிக் கொண்டு பல்வேறு அரசாங்க நிறுவனங்களுடன் கடிதம் பரிமாற்றங்களைச் செய்திருந்தன.

8.6.2 உளவுத்துறைப் பணியகத்தால் ஹிரா மன்றத்தின் அங்கத்தவர்கள் சம்பந்தமாக பாதகமான அறிக்கை காணப்பட்டதனால் ஹிரா மன்றத்திற்கு உளவுத்துறை விடுவிப்புக்கள் வழங்கியிருக்காதிருந்தும் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலகத்தில் பதிவு செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தும் நிறுவனத்தின் பின்னணி சம்பந்தமாக பரீட்சிக்கப்படாது ஹிரா மன்றத்திற்கு உயர்கல்வி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்காக தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் ஹிரா மன்றத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 8.7 மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியினை செயற்படுத்துவதற்காக காத்தான்குடி நகர சபையிடமிருந்து ஒரு கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்

---

8.7.1 நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36(உ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆதனத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம்

பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் கட்டளைச் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் பிரகாரம் (பின்னிணைப்பு - 94) ரூபா 10,000 இற்கு மேற்பட்ட உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தலைவரினால் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனினும், மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு 11,000 சதுர அடி பரப்பளவுள்ள நகர சபைக் கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு 2014 மே 01 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்னர் மேற்கூறிய பிரிவுகளின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் சபையினதும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

8.7.2 அரசாங்க கட்டிடத்தை குத்தகைக்கு வழங்கும் போது அரசாங்க மதிப்பீட்டாளரின் மூலம் குத்தகை வாடகை சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கையினைக் கோரி மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் மாதாந்த குத்தகை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மதிப்பீட்டு அறிக்கை கோரப்படாதும் எதுவித நியாயமான அடிப்படையுமின்றியும் 11,000 சதுர அடிக் கட்டிடத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 5,000 குத்தகை வாடகைக்காக உடன்படிக்கை செய்து கொள்வதற்கு தலைவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

8.7.3 கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட திகதி 2014 நவம்பர் 18 ஆக இருந்த போதிலும், (பின்னிணைப்பு - 95) அதற்கு முன்னைய திகதியான 2014 மே 10 ஆந் திகதி கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட திகதி வரை எதுவித சட்டரீதியான அங்கீகாரமின்றி மேற்கூறிய கட்டிடத்தை மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பயன்படுத்தி வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

8.7.4 சட்டரீதியாகவும் முறைப்படியாகவும் காணியை குத்தகைக்கு வழங்கும் போது சட்ட உத்தியோகத்தரால் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அவர் முன்னிலையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கை தயாரிக்கும் போது சட்ட உத்தியோகத்தரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

8.7.5 உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட குத்தகைக் கட்டிடம் 2018 மார்ச் வரை 47 மாத காலம் குத்தகை தாரரினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட குத்தகைப் பணம் ரூபா 155,000 ஆகும். மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மேற்கூறிய கட்டிடத்திற்காக ரூபா 197,500 மாதாந்த குத்தகை வாடகை அறவிட வேண்டியிருந்ததன் காரணமாக குத்தகை தாரரிடமிருந்து அறவிட வேண்டிய

நிலுவைக் குத்தகைப் பணம் ரூபா 8,475,000 என்பது அவதானிக்கப்பட்டது. நிலுவையான குத்தகைப் பணத்தைச் செலுத்துமாறு குத்தகைதாரருக்கு 2017 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை அந்த நிலுவை குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு - 96)

8.7.6 மதிப்பீட்டு அறிக்கையின்றியும் முறையான நடைமுறை பயன்படுத்தப்படாதும் மாதாந்த குத்தகைப் பெறுமதியைத் தீர்மானித்தல் மற்றும் முறையான அங்கீகாரமின்றி சபையின் ஆதனத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு செயற்பட்டதன் மூலம் நகர சபையின் தலைவர் தமது அதிகாரத்தினை மீறி நடவடிக்கை எடுத்துள்ளதனால் நகர சபைக்கு ரூபா 8,475,000 நட்டம் ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

## 8.8 குத்தகை காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரத்தை வழங்குவது சம்பந்தமாக வாகரை பிரதேச சபையின் கடமைகள்

---

8.8.1 பின்னணி தகவல் இலக்கம் 6.8.1 இல் குறிப்பிடப்பட்ட குத்தகை காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கட்டிட திட்ட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கான விண்ணப்ப படிவம் 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி பிரதேச சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கு முன்னர் அதாவது 2013 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு தெரியப்படுத்தாது அல்லது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மேற்கூறிய செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

8.8.2 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டம் மற்றும் அது தொடர்பான 1982 இன் 04 ஆம் இலக்க திருத்தங்கள் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக பின்வரும் இணக்கமின்மை நிலைமைகள் அவதானிக்கப்பட்டன. (பின்னிணைப்பு 97 மற்றும் 98)

(i) செயற்திட்டத்திலுள்ள கட்டிடத்தொகுதியில் 16 கட்டிடங்கள் அடையாளங் காணக்கூடியதாக இருந்த போதிலும், பிரதேச சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 2 ஆக இருந்ததன் மூலம் ஒழுங்குபடுத்துவதற்காக பிரதேச சபை முறையான பாதுகாப்புடன் தனது பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்தின் நிர்மாணங்களுக்கான அங்கீகாரத்தை எதிர்பார்த்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் தொடர்பாக புலனாய்வை

மேற்கொண்டு அங்கீகாரத்திற்காக சிபார்சு செய்வதற்கு விடய நிபுணத்துவமுள்ள ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விண்ணப்ப பத்திரத்தை பெற்றுக்கொண்ட உடன் நிலையப் பரிசீலனைக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரை ஈடுபடுத்தி அறிக்கையை கோர வேண்டிய போதிலும், அவ்வாறான ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) விண்ணப்ப படிவத்துடன் சுற்றாடல் அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்தின் உத்தேச கட்டிடங்களின் பரப்பளவின் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான எதனையும் அடிப்படையாகக் கொள்ளாது ரூபா 8,262.50 கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(vi) 50 சந்தர்ப்பங்களுக்கு மேற்பட்ட தடவைகளில் அடிக்கடி திருத்தப்பட்ட கட்டிட திட்ட வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் திருத்திய திட்ட வரைபடத்தை பரீட்சிப்பதற்காக 2 சந்தர்ப்பங்களில் மாத்திரம் ரூபா 15,000 மற்றும் 5,000 வீதம் திருத்திய திட்ட வரைபட பரீட்சிப்புக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(vii) கட்டிட திட்ட வரைபடத்தை அங்கீகரிப்பதற்காக மேற்கூறிய விடயம் தொடர்பாக ஒரு கோவை பேணப்படாது பொதுவான ஒழுங்குவிதிகளும் நடைமுறைகளும் பயன்படுத்தாது உத்தேச செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த திட்டவரைபடத்தில் திகதியின்றி தனது கையொப்பத்தை இட்டு முறையற்ற வகையில் அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சபைச் செயலாளரும் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

8.8.3 அவதானிப்பு இலக்கம் 02(vii) இல் குறிப்பிடப்பட்டவாறு முறையற்ற வகையில் மற்றும் நிறுவன ரீதியான நடைமுறைகளின்றி தனிப்பட்ட ரீதியாக மேற்கூறிய செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கட்டிட திட்ட வரைபடத்தில் தனது கையொப்பத்தை ஈடுபடுத்தி அங்கீகாரத்தினை வழங்கியிருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சபைச் செயலாளர் சம்பந்தமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மட்டக்களப்பு அவர்களால் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 99 மற்றும் 100) எவ்வாறாயினும், அவ்வாறு முறையற்ற அங்கீகாரத்தினை வழங்குவதற்கு முன்வந்த செயலாளர் முறையாக விடுமுறையை அங்கீகரிக்காது வெளிநாடு சென்றிருந்தார். (உள்ளூராட்சித் திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளரால் அவருக்கு சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 99 மற்றும் 100)

## 9. சிபார்சுகள்

## 9.1 தொழில்சார் பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு

9.1.1 உயர்கல்வி நிறுவனத்தை பதிவு செய்யும் போது நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய வரையறைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை மற்றும் தொடர்புபட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல்.

(தொடர்பு – 8.1)

9.1.2 தொழில்சார் பயிற்சி அமைச்சிற்கும் ஹிரா மன்றத்திற்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து விடுவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

(தொடர்பு – 8.1.7, 8.1.4)

9.1.3 கற்கைநெறி பாடத்திட்டங்களின் உள்ளடக்கம், கற்கைநெறி மதிப்பீட்டு புள்ளி அல்லது மதிப்பீட்டுத் தகவல்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான சிபார்சுகள் மற்றும் அங்கீகாரத்திற்குரிய எழுத்துமூலச் சான்றுகள் இல்லாதிருப்பதுடன், கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த 49 மாணவர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்கியமை சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(தொடர்பு – 8.1.7, 8.1.4)

9.1.4 இளைஞர் விவகார அமைச்சின் மூலம் ஹிரா மன்றத்தின் பங்குபற்றலின் அடிப்படையில் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது என்ற மறைமுக எண்ணத்தை உருவாக்கி அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகமாக முன்வந்து கற்கை நெறிகளுக்காக மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தல் சம்பந்தமாக உரிய கல்லூரியின் முகாமைத்துவம் தொடர்பில் மற்றும் முறையான அங்கீகாரமின்றி அரச இலட்சினையை பயன்படுத்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல்.

(தொடர்பு – 8.1.12)

9.1.5 தொழில்சார் கல்வி நிறுவனத்தைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக தொழில்சார் பயிற்சி அமைச்சினால் தோற்றுவிக்கப்பட்ட சட்டவிதிகள், பிரமாணங்கள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைப் போல சட்டரீதியான கட்டமைப்பினை மேம்படுத்துதல்.

(தொடர்பு – 8.1.8, 8.1.13)

## 9.2 இலங்கை முதலீட்டுச் சபை

-----------------------------------------------

9.2.1 மேற்படி 8.1.3, 8.3.3, 8.3.4, 8.3.5, 8.3.8 மற்றும் 8.3.9 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட சட்ட விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க செயற்படல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல்.

9.2.2 முதலீட்டுச் சபையில் பொதுவாக ஒரு செயற்திட்டத்தை பதிவு செய்வதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற வரையறைகளை மீறி மேற்கூறிய செயற்திட்டத்தினைப் பதிவு செய்தல் மற்றும் இறக்குமதித் தீர்வை நிவாரணத்தை வழங்குவதற்கான வரையறைகளைப் பூர்த்தி செய்யாதிருந்தும் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள ரூபா 47.51 மில்லியன் இறக்குமதித் தீர்வை நிவாரணத்தினை மீண்டும் அறவீடு செய்வது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளல்.

(தொடர்பு – 8.3.7)

9.2.3 முதலீட்டுச் சபைக்கும் பெட்டிகலோ கெம்பஸ் லிமிடட் நிறுவனத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து விடுவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்தல்.

(தொடர்பு – 8.3.6, 8.3.2)

## 9.3 இலங்கை வங்கி

-----------------------------

9.3.1 நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டவிதிக் கோவைகளுக்கு இணங்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உயர்ந்த பெறுமதிகளைக் கொண்ட உள்வருகின்ற பணம் அனுப்புதல்கள் தொடர்பில் மத்திய வங்கிக்கு அறிக்கையிடாமை மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புமிக்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல்.

(தொடர்பு – 8.4.1, 8.4.2, 8.4.3, 8.4.4, 8.4.5)

9.3.2 நிதி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான சட்டவிதிகள், பிரமாணங்கள் மற்றும் மத்திய வங்கியின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்வருகின்ற பணம் அனுப்புதல்களுக்கான இலங்கை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை வலுப்படுத்துதல்.

(தொடர்பு – 8.4.6, 8.4.7, 8.4.8, 8.4.9, 8.4.10)

## 9.4 இலங்கை மகாவலி அதிகாரசபை

---

9.4.1 1947 இன் 08 ஆம் இலக்க காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணக்கமற்ற வகையிலும் பொறுப்பற்ற விதத்திலும் செயற்பட்டுள்ள மகாவலி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல்.

(தொடர்பு – 8.2.2)

9.4.2 மட்டக்களப்பு கெம்பஸ் லிமிடட் நிறுவனத்திற்கு மகாவலி காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக கையொப்பமிட்ட குத்தகை உடன்படிக்கைகளின் சட்டரீதியான தன்மை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து விடுவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்துதல்

(தொடர்பு - 8.2.12)

9.4.3 மகாவலி காணிகளை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக வன சட்ட விதிகள், பிரமாணங்கள், அங்கீகாரங்கள், நடைமுறைகள் என்பவற்றை மீளாய்வு செய்து மேம்படுத்துதல்.

(தொடர்பு – 8.2.12)

## 9.5 உயர்கல்வி அமைச்சு

---

9.5.1 உயர் கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்வதற்கான நிறுவனரீதியான மீளாய்வு வெற்றியளிக்காது காணப்பட்டிருந்தும் பொதுவான நடைமுறைகளை மீறி மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரிக்கு மாத்திரம் சிறப்பான முறையில் கற்கை நெறிகளை மீளாய்வு செய்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

(தொடர்பு – 8.5)

9.5.2 உயர்கல்வி நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான தகமைகள் மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படுகின்ற துறைகளைப் போல வரையறைகளை மீளாய்வு செய்து தேவையான மேம்படுத்துதல்களை மேற்கொள்ளல்.

(தொடர்பு – 8.5.3, 8.5.4)

9.6 **கோரளைப்பற்று வடக்கு - வாகரை பிரதேச சபை**

9.6.1 கட்டிட திட்ட வரைபடங்களை அங்கீகரிப்பதற்கான கோவையில் வழக்கமான ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி அத்தியாவசதியமான பரிசீலனைகள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளாது முறையற்ற வகையில் தனிப்பட்ட மட்டத்தில் மட்டக்களப்பு கெம்பஸ் லிமிடட் நிறுவனத்தின் செயற்திட்ட திட்ட வரைபடத்தினை அங்கீகரித்தமை தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் (தொடர்பு – 8.8.2(VII))

9.6.2 கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திட்ட வரைபடங்களை மீண்டும் பரீட்சித்து பிரதேச சபையினால் அறவிட வேண்டிய கட்டணத்தை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு - 8.8.2 (V), 8.8.2(VI))

9.7 **காத்தான்குடி நகரசபை**

9.7.1 நகரசபை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க வகையில் காத்தான்குடி நகர சபைக்கு சொந்தமான ஆதனமொன்றை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு – 8.7.1, 8.7.2)

9.7.2 மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளாது மற்றும் முறையற்ற வகையில் நகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக உரிய குத்தகை காலத்துள் நகர சபைக்கு இழப்பாகியிருந்த ரூபா 8,475,000 தொகையான நிலுவை குத்தகை பணம் மற்றும் அதற்கான தண்டப்பணங்கள் காணப்படுமாயின் அந்த தண்டப்பணங்களும் உள்ளடங்கும் வகையில் அனைத்து பணத்தையும் அறவீடு செய்தல்
(தொடர்பு – 8.7.5)

ஒப்பம்./டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2020 நவம்பர் 24 ஆந் திகதி